பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை (16.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 290

## மந்திகையில் வெள்ளியிரவு கிளைமோர் தாக்குதல்; இரண்டு படையினர் பலி; ஏழு பேர் காயம்!

யாழ்ப்பாணம், செப். 16

பருத்தித்துறை, மந்திகை வைத்திய சாலைக்குச் சமீபமாக, நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டனர்; 7 படையினர் காயமடைந்தனர். பாதுகாப்பு அமைச்சு ஊடகத் தகவல் நிலையம் இதனைத் தெரிவித்தது.

யாழ். நகரிலிருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ பஸ் கிளைமோரில் சிக்கியதில் அதில் பயணஞ்செய்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் வன்னியில் நேற்று ஆரம்பமாகின

கிளிநொச்சி, செப். 16

இருபது வருடங்களுக்கு முன்னர், இந்திய அரசாங்கத்துக்கு எதிராக உண்ணா நோன்பு மேற்கொண்டு தனது உயிரை ஆகுதியாக்கிய தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

உண்ணா நோன்பு ஆரம்பித்த தினமான நேற்று பிரத் தியேக இடம் ஒன்றில், தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு தலைவர் வே. பிரபாகரன் மலர்மாலை அணிவித்து சுடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடன் மீளப்பேசுவதற்கு விரைந்து செயற்படவேண்டும் அரசாங்கம்

## வத்திக்கான் பிரதிநிதி வலியுறுத்துகிறார்

கொழும்பு, செப்ரெம்பர் 16

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். அதற்கான முயற்சிகளில் விரைந்து செயற்படவேண்டும்.**

**இனப்பிரச்சினைக்கு போர் மூலம் தீர்வு காணமுடியாது. பேச்சுவார்த்தையூடான தீர்வுக்கு சகல தரப்புகளும் முன்வரவேண்டும்.**

மதரீதியான கோட்பாடுகளின் அடிப்படையில், தீர்வு காண முடியுமா என்பது குறித்து ஆழமாகச் சிந்திக்கப் படவேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார், பாப்பரசரின் பிரதிநிதியான மேற்றாணியார் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

குறுகியகால விடுமுறையில் வத்திக்கானில் இருந்து இங்கு விஜயம் செய்துள்ள பேராயர் மல்கம் ரஞ்சித், கடந்த திங்கட்கிழமை அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

அதன்பின்னர் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

வன்னியில் உள்ள மக்களையும் மன்னாரில் அகதிகளாக இருக்கும் மக்களையும் சந்தித்து அவர்கள் நிலை குறித்துக் கேட்டறிந்தார்.

கொழும்பு திரும்பிய அவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வெள்ளியன்று சந்தித்துப் பேச்சு நடத்தியபின் ஊடகவியலாளர்களையும் சந்தித்தார்.

வத்திக்கான் திரும்பியதும் இலங்கை நிலைவரம் குறித்து பாப்பரசருக்கு அவர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவிருக்கிறார். மேற்றிராணியார் மல்கம் ரஞ்சித் மேலும் தெரிவித்ததாவது:

*மன்னார் மக்கள் அவலமுறுகின்றனர்*

மன்னாரில் இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்தேன். அவர்களின் நிலை மோசமாகவும், கவலை அளிப்பதாகவும் உள்ளது. உணவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேற்று முதல் மாலை 7 மணிக்கு அமுல்

யாழ்ப்பாணம், செப். 16

குடா நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு உத்தரவு இன்று மாலை 7 மணிமுதல் அதிகாலை 4.30 மணிவரை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு

சென்னை, செப். 16

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்களைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் தொழில் புறக்கணிப்பு போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

கடந்த 11ஆம் திகதி இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்து, பத்து மீனவர்களை இலங்கைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வதிரி முகாம் மீது நேற்று மாலை தாக்குதல்

உடுப்பிட்டி, செப். 16

வதிரிச் சந்தியில் அமைக்கப்பட்ட புதிய முகாம்மீது நேற்று மாலை 6.50 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிரனேட் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் சுமார் பத்து நிமிடங்கள் தொடர்ந்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் அதிகாலையில் ஒன்றரை மணி நேர மோதல்

கிளிநொச்சி, செப். 16

கிளாலியின் மேற்குப் பக்கத்தில் இருந்து ஷெல் தாக்குதல்களுடன் நேற்று அதிகாலை 5 மணிக்கு முன்னேற முயன்ற படையினர் மீது, தாக்குதல் நடத்தி அவர்களின் முன்நகர்வு முயற்சியை முறியடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

பெருமெடுப்பில், கடும் ஷெல் தாக்குதலுடன், படையினர் தமது நகர்வு நடவடிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

# உயிலங்குளம் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் பாதுகாப்பு உத்தரவாதம்

## மன்னார் ஆயர் தகவல்

கிளிநொச்சி, செப். 16

கடந்த 3ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டிருக்கும் உயிலங்குளம் பாதையை மீளத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் பாதுகாப்பு உத்தரவாதத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு வழங்கியுள்ளனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் இத் தகவலைத் தம்மிடம் கூறியதாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் தெரிவித்தார்.

உயிலங்குளம் பகுதியில் இம்மாதம் 3ஆம் திகதி இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வாகனம் சிக்கியதை அடுத்து, செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் தமது பிரசன்னத்தை அங்கிருந்து விலக்கிக்கொண்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கருணாநிதியின் உறுதி மொழியைத் தொடர்ந்து

# பழ. நெடுமாறன் உண்ணாவிரதத்தை முடித்தார்; அதன் பின்னர் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை

சென்னை, செப். 16

கடந்த நான்கு தினங்களாக உண்ணாவிரதம் இருந்த தமிழ்த் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன், நேற்று நண்பகல் அளவில் தமது போராட்டத்தை முடித்துக்கொண்டார்.

அதன் பின்னர் அவர் நாடித்துடிப்பு பாதிக்கப்பட்ட நிலையில் தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

பழ.நெடுமாறன் பழரசம் அருந்தி தமது போராட்டத்தை முடித்துக் கொண்ட பின்னர் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

இலங்கையில் - யாழ்ப்பாணத்தில் - உணவு இன்றி வாடும் எமது உறவுகளுக்கு தமிழக மக்கள் வழங்கிய உணவு மற்றும் மருந்து பொருள்களை அங்கு எடுத்துச் செல்ல செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுமதி வழங்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்
## விசேட விழாக்கள் -2007

17.09.2007 (நாளை) திங்கள்: கொடியேற்றம் நண்பகல் 12 மணி
25.09.2007 செவ்வாய்: தேர்த்திருவிழா பிற்பகல் ஒரு மணி
26.092007 புதன்: தீர்த்தத் திருவிழா பிற்பகல் ஒரு மணி

நாதஸ்வர இசை:
இணுவில் ச.இராசன் குழுவினர்
இணுவில் ப.சிவதாஸ் குழுவினர்
கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர்

அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கருணாகரப் பிள்ளையார் கோயில், உரும்பிராய். (64878) உபயகாரர்களும், திருப்பணிச் சபையினரும்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
### தர்மலிங்கம் சண்முகராசா
(அலன்)

மலர்வு: 09.11.1973 உதிர்வு: 03.08.2007

03.08.2007 அன்று அகால மரணமான செய்தி அறிந்து எமக்கு பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

80, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (64887)

உங்கள் ஆத்மா சாந்திப்பெற பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.




## STUDY IN
UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND & MALAYSIA
AN EXCLUSIVE OPPORTUNITY IN SINGAPORE

GUARANTEE

இதோ ஓர் மாபெரும் அரிய சந்தர்ப்பம்..!
முதன் முறையாக சிங்கப்பூரில் உயர் கல்வி தொடரும் மாணவர்களுக்கு...!

BENEFITS TO THE STUDENTS:
- சிங்கப்பூரில் வேலையுடன் கூடிய இரண்டு வருட பாடநெறி.
- சிங்கப்பூரில் 100% அரசாங்கத்திற்கே உரித்தான பல்கலைக்கழகம் (University- Quality Class Standard).
- சகல கற்கைநெறிகளுக்குமான கட்டணங்கள் மிக குறைவு.
- பகுதி நேர வேலை வாய்ப்பு (Part-Time Job 100% Guarantee).
- உணவு தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
- இரண்டு வருடத்துக்குள் நிரந்தர வதிவிட உரிமை (PR) University யால் வழங்கப்படும்.
- Free Airport Pick-up.



கொழும்பில் பாதுகாப்புடன் கூடிய தங்குமிடவசதி ஏற்பாடு செய்து தரப்படும்.

மேலும்...!
- இச்சலுகை பட்டியலுக்கப்பட்டது September 25th வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- முதல் 10 மாணவர்களுக்கு 50% Admission Enrolment இல் கழிவு.
- 100% விசா உத்தரவாதம்.
- Minimum Entry Requirement G.C.E (O/L)

FOR APPOINTMENT :
Mr. Rahul - 077 323 6447 Miss. Hannah - 078 611 5510

GUIDANCE INTERNATIONAL (PVT) LTD
Professional Overseas Higher Education Consultant & Training Centre
P.O Box : 7, Nugegoda 10250, Sri Lanka.
Customer service: 0094 (0) 11 576 2747/576 6999
facsimile: 0094 (0) 11 282 3498
E-mail: info@guidanceint.com Website: www.guidanceint.com

## கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [பெருமாள் கோயிலுக்கு அண்மையில்]

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- 3 மாத கால கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை, கைவேலை பயிற்சிகள்.
  மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facial அழகுக்கலை நடைபெறும்.
- இருவார கால சாறி பிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்
  (இப்பயிற்சிகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்படும்)
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான 6 மாத கால தையல் வகுப்புகள்

தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய பிரிவுகளில் மேலும் மாணவிகள் அனுமதிக்கப்படுவர்

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


## மரண அறிவித்தல்



### செல்வி றூத் அரியகுட்டி
**(மேற்றன் வெஸ்லி ஹைஹ ஸ்கூல் - கல்முனை)**

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல. 01, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளியில் வசித்தவருமான செல்வி றூத் அரியகுட்டி நேற்று (15.09.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு. திருமதி அரியகுட்டியின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான செல்வி பரிமளம் அரியகுட்டி (இளைப்பாறிய ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சேவகி பவளி அரியகுட்டி (கிறிஸ்துவ இல்லம், கல்முனை), சுப்பிரமணியம், திருமதி செல்லாச்சி பீற்றர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்லையா பீற்றரின் (வர்த்தக வங்கி - யாழ்ப்பாணம்) மைத்துனியும் தேவநேசம், தாயவதி, தேவராஜ் (கனடா), தேவதாசன் (பாபு), தேவசுந்தர் (கனடா), அருள்ராஜ் (கனடா), காலஞ்சென்ற தேவசுரேந்திரன், சுகந்தி, சந்திரராஜ் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் ஜெயதேவி, அன்ரனிப்பிள்ளை கங்காநிதி, ஞானமணி, நவினி, சசிலாதேவி, சூளோச்சந்திரன், காதநிதி ஆகியோரின் ஆசை மாமியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (16.09.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரியோவான் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுண்டுக்குளி. தகவல்: பீற்றர், தேவதாசன் (பாபு)
(64894) அ.ச. அன்ரனிப்பிள்ளை (அன்ரோ எலற்றிக்கல்ஸ் ...)


## வீடு வாடகைக்கு
வீட்டுக்குத் தேவையான சகல தளபாடங்களுடன் (Fully Furnished) இரண்டு அறையுள்ள வீடு, கொழும்பு (Anderson Flats)இல் ஒக்ரோபர் மாதத்திலிருந்து வாடகைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு 0714 115004, 0112 589018 உடன் தொடர்பு கொள்ளவும்.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு
புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## (B) பூத் விற்பனைக்கு
தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய தொலைபேசி (B) பூத் விற்பனைக்குண்டு.
தொடர்பு: Y.M.C.A, 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2499.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு
புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: (64712)
ராஜீவ்,
குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.

## உடன் விற்பனைக்கு
CBZ ஸ்ராட் மோட்டார் சைக்கிள், லான்சர் 50 கூல் மோட்டார் மற்றும் அல்லோயன் பெண்நாய் (கூட்டுடன்), ரீன்ரேபிள் (மேசையுடன்), வீட்டுத் தளபாடங்கள், கூரைத் தகரங்கள், ஆண், பெண் துவிச்சக்கரவண்டிகள் (யப்பான் ஏசியா) என்பன விற்பனைக்குண்டு.
★ 25 வருடமாக இயங்கிக்கொண்டிருக்கும் மருந்தகம் ஒப்படைக்கப்படும்.
தொடர்பு: 19/4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே. 0779181018.

## AREA SALES SUPERVISOR (JAFFNA)
### PENTEC / STYLEX
Brand எழுது கருவிகளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கும் நிறுவனத்திற்கு
**AREA SALES SUPERVISOR**
வேண்டப்படுகின்றனர்.
பிரதேசம்: திருகோணமலை, பருத்தித்துறை.
தகைமை: க.பொ.த. (உ/த)
இயலுமை: விற்பனைத்துறையில் குறைந்தது 3 வருடங்கள் அனுபவம் விரும்பப்படும். அத்துடன், இலாபத்துடன் விற்பனை செய்யக்கூடிய ஆற்றல், ஆர்வம் உள்ளோர் தங்கள் சுயவிவரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும்.
**Universal Marketing Services (Pvt) Ltd,**
E mail : Penpal@eureka.lk
Fax: 2448211.


## புற்றுநோயாளருக்கு இலவச சத்துணவுகள்

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைத்து புற்றுநோயாளர்களுக்கு கல்கி பகவானின் ஏகத்துவ பல்கலைக் கழகத்தின் இலங்கை இணைப் பாளர்கள் நேற்று பழ வகைகள் மற்றும் சத்துணவுபால்மா வகைகளை இலவசமாக வழங்கினர். (அ-111)


## தேவை
நுண்கலை வகுப்புகள் நடத்துவதற்கு வீடு வாடகைக்கு தேவை. பகுதியாக இருப்பினும் பரவாயில்லை. யாழ். நகர் அண்டிய பகுதிகளில் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: சிறீக்குமரன் ஆசிரியர் தொ.பே. 0776531167.

## கோழிக்குஞ்சு விநியோகம்
35 நாளில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
ராஜீவ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P.No. 222 3529
222 2867


## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்

பூவுலக பதவி 1939 * 11 * 12



சிவலோக பதவி 2007 * 08 * 27

அமரர்
### இராசதுரை இராசலட்சுமி அம்மா

எங்கள் அம்மா மனம் வாடி வதங்கிறோம் அம்மா
எம்மை ஆதரித்து அரவணைத்தாய் என் அன்புத் தெய்வமே
என் உயிர் பிரிந்தால்தான் என் மனம் ஆறும்
என் முகம் பார்க்க என்னைத் தேடியோடி வருவாய்
உன்முகம் காண ஏங்கி பதறுகிறேன்
என்னை அழைக்க விரைவில் ஓடிவருவாய்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி !

உன் மகன், சிவா

எங்கள் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன் உதவிகள் புரிந்தவர்களுக்கும், வைத்தியசாலை ஊழியர்களுக்கும், தொலைபேசி வழி ஆறுதல் அளித்தவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கிறோம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா 13.09.2007 வியாழக்கிழமை கண்டியில் அமரத்துவம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - சிவக்கொழுந்து தம்பதியரின் புத்திரரும் காலஞ்சென்ற கனகரத்தினம் - நாகமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிவமணியின் அன்புச் சகோதரரும் ஜெயலஷ்மியின் (இளைப்பாறிய ஆசிரியை, கண்டி திரித்துவக் கல்லூரி ) அன்புக் கணவரும் யசோதா (கனடா), இளங்கோ (கனடா), இளமாறன் (அமெரிக்கா) ஆகியோரின் அருமைத் தந்தையும் கலாநிதி அகிலன் (கனடா), அஜந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் அக்ஷயன், கௌஷிகன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.09.2007). திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து அஞ்சலிக்காக பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட திரை அரங்கிற்கு (Arts Theatre) எடுத்துச் செல்லப்பட்டு, மாலை 4 மணிக்கு கண்டி மாகியாவ பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C 55, ஓகஸ்டா ஹில்
பல்கலைக்கழக விடுதி,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
தொ.பே.081 2389317. (64870)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### பரஞ்சோதிநாதன் தனபாக்கியலட்சுமி

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரம் முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், மன்னார் பெரிய கடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதிநாதன் தனபாக்கியலட்சுமி 14.09.2007 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் S.N.பரஞ்சோதிநாதனின் (ஜோதிவிலாஸ், மன்னார்) பாசமிகு மனைவியும் பொன்னுத்துரை - கனகாம்பிகை தம்பதியரின் அன்புப் புதல்வியும் நாகரெட்ணம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் நிர்மலா, மனோகரன், கஜேந்திரன், வசீகரன், ரசிகரன், ஜோதிமாலா, ஜோதிபாலா, கஜமுகன் (ஜோதி புக் சென்றர், மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயும் வாமதேவன், வசந்தி, வனிதா, பத்மலோஜினி, அனுசா, வசந்தகுமரன், சுபாஜினி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியும் சியாமினி, கஜந்தன், சிந்துஸ்கார், மிகானா, நிதுலன், நவீன், வினிஸ், லவனி, நேயா, நிருபா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் சந்திரசேகரம்பிள்ளை (ஆனந்தம்), புஸ்பகாந்தி, யோகேஸ்வரி, ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. பரஞ்சோதிநாதன்,
ப. கஜமுகன்,
ஜோதி விலாஸ் மன்னார்.
(64888) தொ.பே. 023 222 2304.



### சண்முகராசா இரத்தினேஸ்வரி

கோண்டாவில், குமரகோட்டத்தைச் சேர்ந்த, சண்முகராசா இரத்தினேஸ்வரி 13.09.2007 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. பிரணவச்செல்வன்
எனஜைசர் (எவரெடி) லங்கா லிமிடெட் கொழும்பு,
வ.சிவகுமார்
(விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி மட்டக்குளி, கொழு. - 15)

குமரகோட்டம், கோண்டாவில். (64884)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மகளிர் கல்லூரியின்

# தேசிய மட்டத்திலான சாதனை!

# மனவலிமைக்குக் கிடைத்த வெற்றி!


கல்லூரி அதிபர்

விடாமுயற்சி வெற்றி தரும் என்பதை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதன் மூலம் நிரூபித்துள்ளார்கள்.

கடந்த நான்கு வருடங்களாக கல்லூரி அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவிகளும் எடுத்த பெரும் முயற்சி பூவாகி, காயாகி இன்று கனிந்து பழமாகியுள்ளது.

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் உடற்பயிற்சிப் போட்டியில் பலத்த நெருக்கடிகள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே இந்த மாபெரும் சாதனையைப் படைத்துள்ளார்கள்.

மாணவிகளின் மனவலிமையும் எதையும் வெல்ல முடியும் - சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் தான் தேசிய மட்டத்தில் அவர்களை சாதனையாளர்களாக மாற்றியுள்ளது.

இந்தச்சாதனை குறித்துக் கல்லூரி அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கத்திடம் கேட்டபோது, முதலாம் இடம் என்பது இப்பாடசாலைக்கு எதிர்பாராமல் கிடைத்ததன்று. அது நீண்டகாலத் திட்டமிடலின் மூலம் கிடைத்த வெற்றி- என்றார்.

இந்த உடற்பயிற்சி அணியின் தலைவி தமது சாதனை குறித்து பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

எமது பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவிகள் ஆகியோரும் தந்த அயராத ஊக்கமும், தூண்டுதலும் எம்மை இந்த சாதனையை நிலைநாட்ட வழி ஏற்படுத்தியது. நாம் இப்போட்டிக்கு செல்வது தொடர்பாகப் பல்வேறு சந்தேகங்கள் எம்முன் இருந்தன.

எனினும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எம்முள் இருந்தது. எமது கல்விப் பணிப்பாளர்கள், அரச அதிபர் மற்றும் படைத்தரப்பினர் ஆகியோர் செய்த உதவியினால் நாம் போட்டிக்குச் சென்றோம். அவர்களுடைய முயற்சி எமக்கு வெற்றியையும் சாதனையையும் தேடித்தந்துள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் 2004ஆம் ஆண்டு இன்றைய அதிபர் பாடசாலையைப் பொறுப்பேற்றதையடுத்து மிகவும் திறமையான உடற்பயிற்சி அணிகள் உருவாக்கப்பட்டன. இதில் 13 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இணைக்கப்பட்டு தொடர்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## ஏனைய பாடசாலைகளுக்கு இது சிறந்த முன்னுதாரணம்

கல்லூரி ஆசிரியர்களும், பெற்றோர்கள், பழைய மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவிகளும் தந்த ஆதரவும் ஊக்கமுமே இன்று எமது கல்லூரியும் மாணவிகளும் சாதனையாளர்களாக மிளிரக் காரணமாக அமைந்தது என அடக்கமாகப் பதிலளித்தார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கம் ஒரு விளையாட்டு விற்பன்னர். அவர் மகளிர் கல்லூரி அதிபராக வர முன்னர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையின் அதிபராக இருந்தார். அந்தக் காலப்பகுதியில் அந்தப் பாடசாலை கரப்பந்தாட்ட போட்டிகளிலும், உடற்பயிற்சிப் போட்

## குடாநாட்டு விளையாட்டரங்குகளில்

டிகளிலும் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் முத்திரை பதித்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இங்கு ஒரு பாடசாலையின் வளர்ச்சி என்பது அதிபர், ஆசிரியர்கள், பெற்றார்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒட்டுமொத்த ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது என்பதற்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சாதனை ஒரு எடுத்துக் காட்டு.

இன்று பெறப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான


அணித்தலைவி வெற்றிக்கிண்ணத்துடன்

இந்த அணியில் இடம்பெற்றுள்ள 90வீதமான மாணவிகள் நான்கு வருட தொடர் பயிற்சியைப் பெற்றவர்களாவர்.

இந்த உடற்பயிற்சி அணி உருவாக்கத்திற்கு அதிபருடன் பாடசாலையின் உபஅதிபர் திருமதி விஜயகாந்தன் மற்றும் ஆசிரியர்களான திருமதி பவானி ஜெயக்குமார், திருமதி தயாளன் லிங்கேஸ்வரி, திருமதி பாலசுப்பிரமணியம் சாரதா, செல்வி மங்களேஸ்வர சர்மா ராஜினி, சுபாஸ்கரன் அழகரெட்ணம், க.சாந்தசீலன் ஆகியோருடன் பயிற்றுனர்களாக செல்வி மகேஸ்வரி, கோபினாத் ஆகியோரும் தமது முழுப்பங்களிப்பையும் வழங்கினார்கள்.

உடற்பயிற்சி அணியில் இருந்த மாணவிகளின் கல்வியும் பாதிப்படையாத வகையில் விசேடமாக ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு வகுப்பு நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கற்பதற்கு ஆசிரியர்களையும் ஏற்படுத்தியிருந்தார் கல்லூரி அதிபர். இதன் காரணமாக நாம் எமது பயிற்சியையும், கல்வியையும் நாளாந்தம் முழுமையாகப் பெற முடிந்தது. எமது வகுப்பறைக்கற்றலுக்கு இப்பயிற்சி எப்போதும் தடையாக இருந்ததில்லை. காலை 7மணிக்கு ஆரம்பிக்கும் பயிற்சி 8.15இற்கு முடிவடையும்.

பின்னர் பிற்பகல் 3.30மணிக்கு ஆரம்பிக்கும் பயிற்சி மாலை 5மணிக்கு நிறைவுறும். காலை, மாலையில் எமது ஆசிரியர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் எனப் பலரும் எமக்கு சத்துணவுகள் தந்து உதவுவார்கள்.

கல்வியில் எந்தவகையான பங்கமும் ஏற்பட அதிபர், ஆசிரியர்கள் இடமளிக்காது இப்பயிற்சிகள் இடம்பெற்றமையால் பெற்றோர்களும் முழு மனத்துடன் எமக்கு வீடுகளில் ஆதரவும் தந்தார்கள். அதற்கு செய்நன்றியாக அனைவரினதும் இலக்கை இன்று நாம் அடைந்துள்ளோம்.

2004ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இவ் உடற்பயிற்சி அணி அந்த ஆண்டில் கோட்ட, வலய மட்டத்தில் இரண்டாம் இடங்களையும் மாவட்ட மட்டத்தில் நான்காம் இடத்தையும் தான் பெறமுடிந்தது.

2005ஆம் ஆண்டில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் வலய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் இரண்டாம் இடத்தையும், மாகாணமட்டத்தில் 3ஆம் இடத்தையும் தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தையும் பெறமுடிந்தது.

2006ஆம் ஆண்டில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் ஆகிய மட்டங்களில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட போதிலும் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியவில்லை. அதற்கான சூழ்நிலை, சந்தர்ப்பம் அன்று காணப்படவில்லை.

கடந்த பத்து வருடங்களாக வடக்கு - கிழக்கு மாகாணப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று வந்த வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் சாதனையை நாம் முறியடித்தோம்.

2007ஆம் ஆண்டில் கோட்டம், வலயம், மாவட்டம் ஆகிய மட்டங்களில் முதலாம் இடங்களைப் பெற்ற நாம் தேசிய மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றியடைந்துள்ளோம் - என்று மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்தார் அணித்தலைவி.

மாணவிகள் வெற்றிவாகை சூடி கடந்த புதன் கிழமை கப்பம் மூலம் யாழ்.குடாநாட்டுக்கு திரும்பியிருந்தார்கள். இவர்களை பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவிகள் எனப் பலரும் தெல்லிப்பழையில் இருந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

வியாழக்கிழமை பாடசாலையில் அதிபர், மாணவிகள் ஆசிரியர்கள் ஆகியோரால் பாராட்டவென பல பாடசாலைகளின் அதிபர்கள், கல்வியியலாளர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் வந்து குவிந்து தமது அன்பளிப்புகளையும் வழங்கினார்கள்.

இதேபோன்று வெள்ளிக்கிழமை மாணவிகளுக்கான பாராட்டு விழாவொன்று இடம்பெற்றது.

இம்முறை சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரவீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார்கள். கிடைத்த சந்தர்ப்பத்தை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்ட பாடசாலைகள் பாராட்டப்பட வேண்டியது முக்கியம்.

மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய போதிலும் தென்மராட்சி, வடமராட்சி கல்வி வலயங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளும் வாய்ப்பு நழுவவிடப்பட்டமை வேதனைக்குரியதும் குறிப்பிட்ட சமூகத்தின் எதிர்காலத்திற்கு போடப்பட்ட ஒருதடையாகவுமே கொள்ளமுடியும்.

பொதுநிகழ்வுகள், போட்டிகளில் சாட்டுப்


உடற்பயிற்சியின் ஒரு காட்சி

போக்குகள் கூறி ஒதுங்கிக்கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாது. அடுத்த சுற்றாக மெய்வல்லுனர் போட்டி அணிகள் எதிர்வரும் 23ஆம் திகதியளவில் கப்பல் மூலம் தமது பயணத்தை மேற்கொள்ளவுள்ளன.

இந்த அணியில் இடம்பெறவுள்ள தென்மராட்சி, வடமராட்சி மாணவர்களை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெறும் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்யும் பொறுப்பை கல்விப்பணிப்பாளர்கள் உரிய பாடசாலை அதிபர்களுடன் கலந்தாலோசித்து விரைவில் செய்ய வேண்டும். அதன்மூலம் அந்தப் பகுதி விளையாட்டு வீரர்களுக்கும் நன்மைதான் கிடைக்க வேண்டும்.

## விண்ணன்

இந்த இடத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரி உடற்பயிற்சி அணியின் துணிச்சலையும், மனவலிமையும் நாம் மெச்சவேண்டும். அந்தப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே அந்த மகளிர் அணியைக் கொழும்புக்குக் கொண்டு சென்று சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இந்தப் பாடசாலை அதிபர், ஆசிரியர் ஆகியோருக்கு உள்ள அக்கறையை ஏன் ஏனைய பாடசாலைகள் பின்பற்றக் கூடாது.

எனவே இது விடயத்தில் கல்விப் பணிப்பாளர்கள் உட்படக் கல்விச் சமூகம் அனைத்தும் இணைந்து விளையாட்டு வீரர்களுக்கு உற்சாக மூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வெறும் பதவிகளுக்காக மட்டும் கதிரைகளை அலங்கரிக்காமல் பணி செய்வதற்காக அதில் அமர்வதே பொருத்தமானதும் தேவையானதுமாகும்.

இதனை நன்குணர்ந்து - மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சாதனையைப் பின்பற்றி மேலும் பல சாதனைகள் நிலை நாட்டப்பட உரியவர்கள் அக்கறையுடன் செயற்படுவது மிக அவசியம். ★





தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றச் சென்றுள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 15, 19 வயதுப் பிரிவு சதுரங்க அணியினரைப் படங்களில் காணலாம். இந்த இரண்டு அணிகளும் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றவையாகும்.

## யாழ்ப்பாணத்தில் மடுமாதா ஆலயமாக விளங்கும் சாட்டி சிந்தாத்திரை அன்னையின் தலம்

சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தல பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை 22.09.2007 அன்று காலை 9.30மணிக்கு வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது என சாட்டி யாத்திரைத் தலப் பரிபாலகர் ஸ்ரனிஸ்லொஸ் பிலிப் அ.ம.தி. அடிகளார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். நகரில் இருந்து போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் நெடுந்தீவு பக்தர்கள் மேற்படி திருவிழாவில் கலந்து கொள்ள வழி செய்யும் முகமாக 7மணிக்கு புறப்படும் படகுச்சேவை அன்றையதினம் 6 மணிக்கு நெடுந் தீவில் இருந்து புறப்பட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 13ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மேற்படி பெரு விழா நெடுந்தீவு, கரம்பொன், புங்குடுதீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை, நாரந்தனை பங்குகள் வாழ் மக்களால் ஒவ்வொருநாளும் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டு இறுதிநாள் திருவிழாத் திருப்பலி காலை 9.30 மணிக்கு இடம்பெற உள்ளது. இலங்கை வாழ் தமிழ்மக்கள் அனைவருக்கும் அமைதியும், சமாதானமும் நிறைந்த ஓர் எதிர்காலத்தை சாட்டி அன்னையிடம் வேண்டி அவர் பதிநாடுவோம்.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் கிறிஸ்துவத்தின் ஒரு விளைநில மாகவும், வளநிலமாகவும் தீவுப் பகுதி விளங்குகின்றது. 5 பங்குகளையும், 34 ஆலயங்களையும் கொண்டுள்ள இப்பிரதேசம் கத்தோலிக்க விசுவாசத்தில் ஊன்றி வளர்ந்த ஓர் இடமாகும். யாழ்.மறைமாவட்டத்திற்குரிய மிகவும் பிரசித்திபெற்ற 3 முக்கிய யாத்திரைத் தலங்கள் தீவுப் பகுதியில் அமைந்திருப்பது இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். வேலணை சாட்டி மாதா யாத்திரைத்தலம், சரவணை சின்னமடு மாதா யாத்திரைத்தலம், கரம்பொன் வேளாங்கன்னி அன்னை யாத்திரைத்தலம் ஆகிய மூன்று யாத்திரைத் தலங்களும் யாழ்.மறைமாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்களை இங்கு குழுமிவரவிருடா வருடம் அழைத்து வருகின்றன. இந்த மூன்று யாத்திரைத் தலங்களும் தேவமாதாவுக்குரிய யாத்திரைத் தலங்களாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கானகத்தில் வாழும் மருத மடு அன்னையின் இயற்கை அழகு கொண்ட யாத்திரைத் தலம், 1981ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டம் பிரிக்கப்பட்டபோது மன்னார் மறைமாவட்டத்துக்குரிய பகுதியாக பிரிந்துபோன பின்னர் யாழ். மறைமாவட்டத்துக்கென மடுவைப்போல ஒரு யாத்திரைத் தலத்தை உருவாக்கி வளர்க்கவேண்டும் என்ற எண்ணமும் ஏக்கமும் பலர் மனதுகளில் உருவாகின. நீண்டகால சரித்திரப் பின்னணியும், மக்கள் மத்தியில் பிரசித்தியும், இயற்கை அழகும் இட

## ஞாயிறு நற்பிரசாதம்

அமைப்பும், கடல் வளமும் கொண்ட சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தை யாழ்.மறைமாவட்டத்தின் தலைசிறந்த யாத்திரைத் தலமாக மாற்றி அமைக்கவேண்டும் என்ற விருப்பமும் வேண்டுதலும் நாட்டு நிலைமைகளாலும், குழப்பங்களாலும் இன்றுவரை கைகூடாமலே போயுள்ளது.

லைடன் தீவின் பழம்பெரும் கிராமங்களில் ஒன்றாகிய வேலணையின் வடகீழ்த் திசையிலுள்ள சிற்றூராகிய சாட்டியில் "சாட்டி மாதா" என்று மக்களால் அன்பாக அழைக்கப்படும் பிரசித்திபெற்ற சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலம் அமைந்துள்ளது.

தற்போதைய சாட்டிப் பரிபாலகர் ஸ்ரனிஸ்லொஸ் பிலிப் அ.ம.தி அடிகளார் தம் பணிகளை பொறுப்பேற்ற பின்னர் சாட்டி அன்னை யாத்திரைத்தலத்தை வளர்க்கும் நோக்குடன் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார்.

எமது மண்ணில் பயமும் பதற்றமும், துன்பமும், துயரமும், வெறுப்பும், வேதனையும் இன்னும் தொடர்ந்திருக்கும் வேளையில் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினை எம் மண்ணுக்கும் மக்களுக்கும் தர சாட்டி அன்னையிடம் பரிந்து பேசவும், நாட்டின் சமாதானத்துக்காக செபிக்கவும் சாட்டி அன்னையின் பதியில் ஒன்றுகூடுவோம்.

-அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 ஆம் ஆண்டின் நினைவலைகள்

மலர்ந்தது 01 . 10 . 1939



மடிந்தது 16 . 09 . 1996

### அமரர் பூதர் இரத்தினம்

(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன் சி.கூ.தா)

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

துர்க்கா மில் அருகில்,
பொன்னாலை வீதி,
மானிப்பாய். (64864) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

அவ்ஜா அம்பிலிவயர்(100w) ரெக்கோடிங் பார் உபகரணங்கள், சோக்கேஸ் உட்பட கண்ணாடி பிற்றிங் மற்றும் ஒறிஜினல் CDகள். அனைத்துப் பொருள்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொ.பே.: 071 6177495
077 6625955
060 225 0104
(64807)

## பதவி வெற்றிடம்

லிகிதர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை gnanam_12@hotmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு அனுப்பவும் அல்லது உங்கள் தொலைபேசி இலக்கத்தை 0041-76-5398181இற்கு S.M.S செய்யவும்.
வேலை இடம்: வடமராட்சி, கொற்றாவத்தை.
மேலதிக தொடர்புகளுக்கு:
வை.சாந்தலிங்கம். ம.ம.வி.வீதி,
காளி கோயிலடி, நெல்லியடி.
(64807)

## ஓராண்டு நினைவஞ்சலி

வையகப் பூவாக 27 . 04 . 1948



வானகச் சுடராக 27 . 09 . 2006

### அமரர் மயிலன் மகாலிங்கம்

(உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க விற்பனையாளர்)

திதி : வளர்பிறை பஞ்சமி

அப்பா அப்பா அன்புடன் வளர்த்த தந்தையே!
எங்கள் மந்திர வாழ்வே உங்கள் அன்பை எங்கினிக் காண்போம்!
அணைத்த கையும் ஆறுதல் மொழியும் எங்களை நினைத்த
இனிய நெஞ்சமும் எந்தப்பிறவியில் காணக் கிடைக்குமோ!

'கதிர் அகம்'
நாவலடி, உடுப்பிட்டி. (சி/53700) குடும்பத்தினர்.


# BE A DOCTOR




**Eastern Europe**
SPOT Admissions →
Doctor of medicine MD
English Medium

Conducted by:
Prof. Igor Generalov
Head of the Department – Microbiology
COLOMBO - PATHE Academy 16th sep @ 10.00 a.m.
KANDY - Queens Hotel 18th sep @ 10.00 a.m.
COLOMBO - PATHE Academy 22th sep @ 02.00 p.m.

Recognized by SRI LANKA MEDICAL COUNCIL

உள்நுழையும் அனுமதி உத்தரவாதம்
அழைப்புக் கடிதம், அனுசரணைக் கடிதங்கள், வங்கிக் கணக்குக் கூற்று, விசா நேர்முகப் பரீட்சை எவையும் அவசியமில்லை

- PATHE ACADEMY அனுமதிக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் கற்கைநெறி அனுமதியும் விசா அனுமதியும் பெற்றுத்தரப்படும்.
- கல்விக்கான கடன்வசதி 5 நாள்களுக்குள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- தங்குமிட வசதி, இணையத்தள வசதி, பொழுதுபோக்கு வசதி, நூலக, ஆய்வுகூட வசதிகள், செயல்முறைக்கல்வி மற்றும் பரீட்சைக் கட்டணம் யாவும் இலவசம்.
- போக்குவரத்து, உணவு கட்டணங்கள், விசேட சலுகை அடிப்படையில்.
- இலங்கையிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் 200 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றபின் தொழில் பார்க்கிறார்கள்.
- இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு உங்களுக்கு உதவவென 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர்.
- வெளிநாட்டவர்களுக்கு ஐரோப்பிய நாட்டில் கற்க மிகவும் பாதுகாப்பான இடம். (ஆசிய சிநேக சுற்றாடல்
- பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உட்பட உலகின் ஏனைய பல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருவகால விடுமுறை வேளையில் சென்று பகுதிநேர தொழில் பார்க்கும் வாய்ப்பு.
- பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் குடியேற வாய்ப்பு.
- வருடாந்தக் கட்டணம் இரு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பு.

PATHE ACADEMY மூலம் அனுமதி பெற்ற மாணவர்கள் விபரம், ஏனைய தகவல்களை எமது இணையத்தள முகவரியிலும், அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

NOW 0% INTEREST INSTALMENT PLAN BY MAJOR CREDIT CARDS

The programme is executed in par with ACT16 Exams syllabus

Transfer from other universities
Engineering | IT | Other courses also available

பதிவுகளை இன்றே செய்யுங்கள், அனுமதிபெற உடனடியாகவே பறந்து செல்லுங்கள் - தமிழில் விபரம்பெற : 0773017883

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271. www.patheacademy.org


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### குமாரசாமி இராஜசிங்கம்

(பிரபல கடல் உணவு கொள்வனவு - விற்பனையாளர், காக்கைதீவு)

விதியின் வழியில் 26-01-1964

சதியின் வலையில் 03-08-2007

திதி: 16.09.2007

இராஜ நடையும் இராஜயோகமும் கொண்ட இராஜசிங்கம்
உன் இராஜமுடியை இரவில் வந்த கயவர்
ஈனமாக்கி விட்டார்களோ ஈகை குணத்திற்கு பெயர்போனவனுக்கு
ஈற்றில் இதுவா நடக்க வேண்டும்
இதை கேள்விப்பட்ட எல்லோருக்கும் இதயம்
ஒரு தடவை நின்று அல்லவா துடிக்குது
இனி எப்போது உன் திருமுகத்தை காண்போம் நாம்
இறைவன் தாமே இதை பொறுப்பெடுக்கட்டும்.

உன்பிரிவால் வாடும் :
மனைவி, மாமன், மாமி, பேர்த்தியார்,
அண்ணன்மார், தம்பிமார்,
மச்சான்மார், அண்ணிமார், தங்கைமார்,
அக்கா, பெறாமக்கள், மருமக்கள்.

காயாவீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு

தகவல்:
கு.அமரசிங்கம்
(அண்ணா- C.N.H. ஊழியர் ).

(64109)

## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்விவைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :17.09.2007 ஆம் திகதி தொடக்கம் 27.09.2007 ஆம் திகதி பி.ப.3 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி : 28.09.2007 ந.ப.12 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 28.09.2007 பி.ப.2.30மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருக்கவேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை *'செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி'* என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற்வரி |
|---|---|---|---|---|
| 01 | எல்லைச்சுவர் அமைத்தல் - கொக்குவில் பொதுச் சந்தை | 10,000.00 | 500.00 | 75.00 |
| 02 | திருநெல்வேலி இந்துமயானம் எல்லைச்சுவர் அமைத்தலும் இளைப்பாற்றும் மடம் அமைத்தலும் | 5,000.00 | 500.00 | 75.00 |
| 03 | திருநெல்வேலி பொதுச் சந்தை குழாய்க்கிணறு அமைத்தல் | 2,500.00 | 500.00 | 75.00 |
| 04 | திருநெல்வேலி மீன் சந்தை திருத்தம் | 5,000.00 | 500.00 | 75.00 |
| 05 | வாகனத்தரிப்பிடம் அமைத்தல் - கொக்குவில் உப-அலுவலகம், நல்லூர் பிரதேச சபை | 2,000.00 | 500.00 | 75.00 |
| 06 | நீர்த் தாங்கி திருத்தம் - கொக்குவில் உப-அலுவலகம், நல்லூர் பிரதேச சபை | 1,500 | 500.00 | 75.00 |
| 07 | பொதுநூலகம் திருத்தம் - கோண்டாவில் | 5,000.00 | 500.00 | 75.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
14.09.2007 (சி/53691)

பொன்னையா வையாபுரநாதன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் - 2007

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் இக்ராட் தரவு பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் காலம் :- 17.09.2007 தொடக்கம் 04.10.2007 வரை
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் காலம் :- 05-10-2007 மு.ப. 10.30 மணி
கேள்வி திறக்கப்படும் காலம் :- 05.10.2007 மு.ப. 11 மணி

| தொ. இல | வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | ஆகக் குறைந்த இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|---|
| 01 | யாழ்.பிரதேச செயலக பிரதான கட்டடத் திருத்தம் | 10350/- | 1000/- | M9 |
| 02 | யாழ்.பிரதேச செயலக கீழ் தளத்திருத்தம் (Block A) | 13000/- | 1000/- | M9 |
| 03 | யாழ்.பிரதேச செயலக கட்டடத் திருத்தம் முதலாம் மாடி (Block A) | 32200/- | 1000/- | M8 |

கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் தமது இக்ராட் பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்து சிபாரிசுக் கடிதத்தினைப் பெறுதல்வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டுக் கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்பட்டு தனித்தனியே கடித உறையிலிட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு யாழ்.பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல்வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதிசேர்வரி சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல்வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 02 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை வேலை நாள்களில் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ம.ஜெகூ
பிரதேச செயலர்/ சிறு கேள்விச் சபைத் தலைவர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். (சி/53685)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய தலைவர்கள் தவறவிட்ட சந்தர்ப்பங்களை ஆராய்ந்து தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்க

**கடந்தகாலத் தலைவர்கள் விட்டதவறுகளை ஒரு பாடமாகக் கொண்டு தற்போதைய ஆய்தப் போராட்டத்திலிருந்து நாட்டை விடுவித்துத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வினை மகிந்த ராஜபக்ஷ உருவாக்கவேண்டும்.**

**'த ஐலன்ட்' பத்திரிகைக்குக் கவிமன் ஊறு கொடவத்த 'தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள்' என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரையில் இக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.**

எமது அரசியல்வாதிகள் சிலர் நாகபாம்பின் வாலில் பிடித்துக்கொண்டு பாம்பைப் பிடிக்க முயல்வது போல் இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை, பயங்கரவாதப் பிரச்சினைதான் உள்ளது எனக் கூறிவருகின்றனர். பாம்பின் வாலைப் பிடித்து பாம்பைப் பிடிக்க முயல்வது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்.


டி.எஸ்.சேனநாயக்க

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இருக்கவில்லை. தேசிய ரீதியிலான பிரச்சினைதான் இருந்தது. பூரண சுதந்திரம் அடைவது தாய்மொழிக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டதன் காரணமாக மொழிப் பிரச்சினை உருவாகவில்லை. காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து தாய்நாட்டை விடுவிப்பதும் அபிவிருத்தி செய்வதுமே பிரச்சினையாக இருந்தன.

இலங்கைத் தேசிய காங்கிரஸில் சகல இனங்களின் பிரதிநிதிகளும் அங்கத்தவர்களாக இருந்தனர். இனவாதச் சிந்தனையற்ற குறுகிய மனப்பான்மையற்ற சிறந்த தலைவர்கள் தலைமைப் பதவியிலிருந்தனர். சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கி இனத்தவர்களும் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தவர்களும் ஒரு குடையின் கீழ் திரண்ட சுதந்திரத்திற்காகப் போராடினர் என்பது எம் அனைவருக்கும் தெரிந்தவிடயம்.

இவர்களுடன் இலங்கை சமசமாஜக் கட்சி, தொழிற்கட்சி என்பனவும் இணைந்து முழுமையான சுதந்திரத்திற்காகப் போராடின.

1947 ஆம் ஆண்டுத் தேர்தல்- இலங்கையில் பிறந்த அனைவருக்கும் பிரித்தானியாவுடன் தொடர்புடைய தேர்தலாக அது அமைந்தது.




எப்படியோ அதிகார அரசியல் விளையாடத் தொடங்கியது. டி.எஸ். சேனநாயக்கா ஒரு பேனாவால் போட்ட கீறல் மூலம் இந்தியத்தமிழர்களின் பிரஜா உரிமையை இல்லாமல் செய்துவிட்டார். வேறு நீதியான மாற்று வழிகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்தியத்தமிழர்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்தனர்.

**ராஜரட்ணவின் சாகும்வரை உண்ணாவிரதம்**

அடுத்து 1936 ஆம் ஆண்டு எவ்.ஆர்.

## ஜனாதிபதி மகிந்தவுக்கு ஒரு சிங்கள பிரமுகர் விடுத்துள்ள கோரிக்கை

ஜெயசூரியா, கே.எம்.பி. ராஜரட்ண போன்ற தீவிரவாதிகள் நாடாளுமன்ற வளாகத்தினுள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக அழுத்தம் கொடுத்ததையடுத்து தமிழர் தரப்புக்கு நியாயமற்ற சிங்களம் மட்டும் சட்டத்தை பண்டாரநாயக்கா அமுல்படுத்தினார்.


பண்டாரநாயக்க

அடுத்த கட்டம் இலங்கையிலுள்ள இரு பிரதான சமூகங்களின் தலைவர்களாலும் செய்து கொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம். ஜே.ஆரின் அரசியல் கூத்தான கண்டி பாதயாத் திரை காரணமாகக் கைவிடப்பட்டது. இதே போல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கடும் எதிர்ப்புக் காரணமாக டட்லி-செல்வா ஒப்பந்தமும் கைவிடப்பட்டது. அடுத்து சிறிமாவின் காலத்தை எடுத்துப்பார்த்தால் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில பெருந்தோட்டத் துறைத் தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழர்களைத் திருப்பியனுப்புவதற்காக சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். அப்போது எதிர்க்கட்சித்தலைவராக இருந்த டட்லியும் இதற்கு ஒத்துழைத்தார்.




மூன்றில் இரண்டு பங்கு இந்திய வம்சாவழித் தமிழர்களை இந்தியா ஏற்றுக் கொண்டதுடன் அவர்களை மீளக்குடியமர்த்து வதற்குரிய ஏற்பாடுகளையும்மேற் கொண்டது. இந்த ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தால் எமது நூற்றாண்டு காலப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும். அத்துடன் நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்திருக்கும்.

**ஜே.ஆர். பதவிக்கு வந்தார்**



அடுத்து 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர். சர்வகட்சி மாநாட்டின் மூலம் தமிழர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்கப்போவதாகக் கூறினார்.

பெரும்பான்மை சமூகத்திடம் தமது நலன்களை நம்பியிருந்த தமிழ்ச் சமூகம் தனி நாடு கோரிப் போராட இது வழிவகுத்தது. படுமோசமான ஆறாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துதற்கு ஈழப் போராட்டம் வழிவகுத்தது. இதன் காரணமாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலிருந்து துரத்தப்பட்டனர். காளான் போராளிக் குழுக்கள் உருவாகின. இவர்கள் மரபுரீதியான தமிழ் தலைவர்களுடன் உடன்பட மறுத்தனர். 1983ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம் ஒன்று தகர்க்கப்பட்டு 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இவர்கள் பலமடைந்தனர். அதன் பிறகு இன்று வரை என்ன நடந்தது என்பது அனைவருக்கும் நன்கு தெரியும்.


பிரேமதாஸ

ஜே.ஆரினால் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் படுமோசமான இரத்த ஆற்றில் அப்பாவித் தமிழர்கள் நீந்தினர். இந்தியா தனது கப்பல்களை அனுப்பி தமிழர்களைப் பாதுகாப்பாக இந்தியாவுக்குக்கொண்டு செல்ல இது வழிவகுத்தது.

**ஜே.ஆரின் தவறான வெளிநாட்டுக் கொள்கை**

பயங்கரவாதம் இந்தியாவினால் பராமரிக்கப்பட்டு அகதி முகாம்களிலேயே உருவாகியது. ஜே.ஆரினால் முன்னெடுக்கப்பட்ட அமெரிக்க சார்பு இந்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கையே இதற்குக்காரணம். இந்தியா யாழ்ப்பாணத்தில் பருப்புப் பார்சல்களைப் போட்டதன் மூலம் ஜேர்.ஆர்.அரசாங்கத்தின் அதிகாரம் முழுவதையும் சாப்பிட்டு விட்டது. தர்க்கரீதியாக இது திம்புப் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. அத்துடன் ஜே.ஆர்.- ராஜீவ் உடன்படிக்கை இந்திய இராணுவம் போராளிகளை நசுக்கவும் வழிவகுத்தது. மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக 13 ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது.


சந்திரிகா

மத்திய அரசாங்கத்தில் பதவி வகித்த ஜே.ஆர்., பிரேமதாஸ, சந்திரிகா போன்றோர் அதிகாரப் பகிர்வு விடயத்தில் தமது நிலைப்பாட்டிலிருந்து ஓர் அங்குலம் கூட நகரவில்லை.


எப்படியிருந்தபோதிலும் 1982ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். சிறிமாவின் குடியுரிமை பறிக்கப்பட்ட நிலையில் ஹெக்டர் கொப்பேக்கடுவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

இவர்களுடன் குமார் பொன்னம்பலம், ரோகண விஜேவீர, வாசுதேவ நாணயக்கார, கொல்வின், ஆர்.டீ.சில்வா ஆகியோரும் போட்டியிட்டனர். யாழ்ப்பாண மக்கள் ஹெக்டர் கொப்பேகடுவவை தமது இரண்டாவது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தனர்.

**தமிழில் : ந.பரமேஸ்வரன்**

(9 ஆம் பக்கம் பார்க்கவும்)

# அதிஉயர் மருத்துவ தொழில்நுட்ப சிகிச்சை நோய் கண்டுபிடித்தலுக்கான செலவுகள்



**இன்றைய நோய்கள், நோயாளர்கள், சிகிச்சை முறைகள், அவைகளின் பிரச்சினைகள்**

மருத்துவ கலாநிதி

**க.சிவனேசன்**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

01. எக்கோ 2,000 ரூ. இருதய சிகிச்சை நிபுணர் றிப்போட் செய்வதற்கு 2,000 ரூ.

02. அப்பியாச ஈ.சி.ஜி. 2,000 ரூ.

03. இருதய இரத்தஓட்ட றிப்போட் - இஞ்சியோகிராம் 40,000/-

04. அஞ்சியோ பிளாஸ்ரி ரூ. 3 இலட்சம்

05. ஸ்ரெண்ட் ரூ. 1 இலட்சம்

06. பைபாஸ் சத்திர சிகிச்சை ரூ. 5 இலட்சம்

07. இருதய வால்வு மாற்று அறுவைச் சிகிச்சை ரூ. 5 இலட்சம்

08. செயற்கை வால்வு ரூ.3 இலட்சம்

09. பலூண் வால்வு சிகிச்சை ரூ.3 இலட்சம்

10. நிரந்தர பேஸ் மேக்கர் ரூ.2 இலட்சம்

11. இருதயத்துடிப்பு மொனிற்றர், செயற்கைச் சுவாசம், நாடி இரத்த பரிசோதனை.

ஒக்சிமீற்றர் பிரதான நாளத்தின் ஊடாக சிகிச்சையளித்தல், உணவு ஊட்டுதல்மற்றும் சுவான்

**சுகநலம்**

கான்ஸ் கதீற்றர், நாடி அமுக்கம் அளத்தல் இரத்த அமுக்க மருந்துகளை செலுத்தல் போன்ற வசதிகளைச் செலுத்தக்கூடிய தீவிர, அதிதீவிர இருதய சிகிச்சைப் பிரிவின் நாளொன்றுக்கு ஒரு கட்டிலுக்கு ஆள் செலவு 1-2 ஆயிரம் ரூபா.

12. இருதய கணத்தாக்கம் கறை கடத்தும் பரிசோதனை ரூ.5,000/-

13. சுவாசப் பை தொழிற்பாட்டுப் பரிசோதனை ரூ.2,000/-

14. வாதனாளி, புறம்கன் பரிசோதனை ரூ.5,000/-

15. சுவாச இரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்தலைக் கண்டறியும் பரிசோதனை ரூ. 19,000/-

16. சமிபாட்டுத் தொகுதி மேல் கீழ் பரிசோதனை ஒவ்வொன்றிற்கும் ரூ. 5,000/-

17. லற்பிறஸ்கோப் நோய்களைக் கண்டுபிடிக்க ரூ.5,000 /-

18. லப்பிறஸ்கோப்பின் ஊடாக பித்தப்பை முதலான சத்திரசிகிச்சை ரூ.50,000/-

19. சிறுநீரகப்பை பரிசோதனை ரூ.3000/-

20.சிறுநீரகத்தொகுதிப் பரிசோதனை ஒவ்வொன்றிற்கும் ரூ.5000/-

21. சிறுநீரகத் தொழிற்பாடு குறைந்தவர்களுக்கான இரத்தச் சுத்திகரிப்பு ஒவ்வொரு தரமும் ரூ.10,000/-

22. புறஸ்ரேற் சத்திர சிகிச்சை கருவியினூடாக 6 இலட்சம்

23. சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை ரூ.15 இலட்சம்

24. சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையின் மாதமொன்றிற்கான மருத்துவச் செலவு ரூ.20,000/-

25. முறைத் தொழிற்பாட்டுப் பரிசோதனை ரூ.3,000/-

26. தசைத் தொழிற்பாட்டுப் பரிசோதனை ரூ.2,000/-

27. முழங்கால் மாற்று அறுவைச் சிகிச்சை மொத்தமாக 3 இலட்சம்

28. இலேசர் கற்றாக் சிகிச்சை ரூ.40,000/-

29. செயற்கை கருத்தரிப்பு ஆரம்ப பரிசோதனைகள் ரூ. 50,000/-

30. செயற்கை கருத்தரிப்பு ஒவ்வொருதரமும் 1 இலட்சம்

31. எலும்பு மச்சை மாற்று அறுவைச் சிகிச்சை 12 இலட்சம் ரூபா

32. சிறுநீரகத் தொகுதிகளில் கற்களுக்கு இலேசர்மூலம் சிகிச்சை 1 இலட்சம் ரூபா

மேற்கூறிய நோய் கண்டுபிடிப்பு சிகிச்சை போன்றவற்றை அதிஉயர் தொழில்நுட்பத்தினால் அளிக்கப்படும்போது அவற்றிற்கான அதிக செலவிற்குக் காரணம் அவற்றை அளிக்கும் உபகரணங்களின் ஆரம்ப கொள்வனவுச் செலவு அதைவிட பன்மடங்காக இருப்பதுதான். ஏன் கோடிக்கணக்கென்றும் சொல்லலாம்.

**நோய்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் தரத்தைத் தீர்மானிப்பவை**

01. அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை இலவசமாக இருப்பதில் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது.

இது சிகிச்சையின் தரத்தைக் குறைக்கும். மாறாக உயர்தொழில்நுட்ப வசதிகளை உடைய முக்கியமாகத் தனியார் வைத்திய ஸ்தாபனங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படும்.

02. மருத்துவ[illegible] யர்களினதும் மற்றைய பகுதிகளில் கடமைபுரியும் தாதிமார் பலதரப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்றவர்களை சுலபமாகப் பெறக்கூடிய நிலை அல்லது தட்டுப்பாடு போன்றவை. தட்டுப்பாட்டிற்கு மேற்கூறியவர்களது நியமனம் சரியானமுறையில் நிர்வாகிக்கப்படாது விடுவதும் வளர்ச்சியடையாத நாடுகளிலிருந்து இவர்கள் சமூக, பொருளாதார, பூகோள, அரசியல் காரணங்களுக்காக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு செல்வதும் ஒரு காரணமாகிறது. எல்லா வசதிகளையுமுடைய ஒரு நகரத்தில் இவர்கள் மேற்கூறிய காரணங்களுக்காக வேலை செய்ய விரும்புவதினால் இங்கு அவர்கள் அதிகமாக நியமிக்கப்படுகிறார்கள். இதனால் பின்தங்கிய பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.

03. நாட்டின் நிதித் திட்டமிடல்

04. நோயாளியின் கல்வி நிதித் தரம்

## நாட்டின் சுகாதாரத்தை மேம்படுத்தும் சில வழிமுறைகள் (பகுதி- மூன்று)

05.வைத்திய சிகிச்சையளிப்பவர்களது மனப்பாங்கு

06. வைத்திய சிகிச்சையளிப்பவர்கள் தொடர்ச்சியாக வேலை செய்யும் நேரத்தின் அளவும் வைத்திய சிகிச்சையின் தரத்தைத் தீர்மானிக்கும்.

ஆகக்கூடிய மணித்தியாலங்கள் 36 அல்லது 1½ நாள்கள் ஒருவர் தொடர்ச்சியாக வேலை செய்யலாமென சில இடங்களில் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டுள்ளது. சில பிரபல்யமான நன்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள் அடிப்படை மருத்துவ அறிவும் அடிப்படை மருத்துவ பொது அறிவு போன்றவை கூடியவர்களாகவும் அனுபவம்வாய்ந்தவர்களாகவும் தமது நோயாளர்களுடன் விரும்பத்தக்கமுறையில் தொடர்புகளை ஏற்படுத்தவதிலும் சிறந்தவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் தமது சிகிச்சையளிக்கும் நோயாளியினால் ஏற்படும் மனச்சோர்வை மாற்றியமைக்க இடைக்கிடை விடுமுறைகள் செல்லவேண்டும். நோயாளர்களது நோய்களின் தன்மையை அவற்றின் கடுமையைப் பொறுத்து வரிசைப்படுத்த வேண்டும். நோயாளர்கள் வைத்தியர்களை நாழும் பொழுது பலர் தமது குறிப்பேடுகளைக் கொண்டுவருவதில்லை. நோயாளர்களுக்கு இரண்டாவது அபிப்பிராயம் எடுப்பதற்கான உரி[illegible] வைத்தியர்களும் ஒரு நோயைக் கண்டுபிடிப்பதிலும் சிகிச்சையளிப்பதிலும் தங்களுக்குள் வேறுபடுகிறார்கள். ஆனால் பலராலும் ஏற்கக்கூடிய முறையைக் கையாளுவது ஒரு சிறந்த செயலாகும். அரச வைத்தியசாலைகளில் மருத்துவச் செலவைக் கருத்திற்கொண்டு தேவையான பரிசோதனைகள் மட்டும் செய்யப்படுகின்றன. ஆனால் வசதிபடைத்த சிகிச்சைமுறையின் செலவு கூடிய பல சோதனைகள் செய்யப்படுகின்றன. இதனால் மறைந்துகிடக்கும் நோய்களைக் கண்டு பிடித்து சிகிச்சையளிக்கக்கூடிய நன்மை ஏற்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள செல்வந்தர்கள் சிலர் தமது உடலை முழுக்க ஸ்கான் பண்ணித் தமது உடலில் ஏதாவது நோய்கள் மறைமுகமாக இருக்கிறதாவெனக் கண்டுபிடிக்க முற்படுகிறதாவது ஆச்சரியப்படத்தக்க அல்லது விவாதத்துக்குரிய அல்லது வியப்புக்குரிய விடயமாகிறது. மருத்துவக் காப்புறுதி வளர்ந்துவரும் மருத்துவ செலவை ஈடுசெய்ய உதவும்.

**மருத்துவத்தொழில் மேம்பாட வழிகாட்டல்**

இப்பிரிவு பலஇடங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. ஒருவரது மருத்துவப் பட்டப்படிப் பின் பின்பு இந்தத் துறையில் மிகவும் அனுபவம் வாய்ந்த பூரணமான தகுதியான ஒருவர் அந்தப் பகுதியிலுள்ள சனத்தொகை, தேவை, அங்குள்ள தொழில் வசதி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தனிப்பட்ட ஒருவரின் நிதி நிலைமை அவரது மற்றைய தனிப்பட்ட காரணங்களை நன்றாகத் தெரிந்து ஒருவரின் தனிப்பட்ட விருப்பம் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு அறிவுறுத்தினால் அந்தப் பகுதியில் சுகாதார சேவை மேலும் மேம்படும். தற்காலத்தில் மருத்துவர்களில் 80 வீதமானவர்கள் வைத்திய சிகிச்சையளிப்பதிலும் இதில் 20 வீதமானவர்கள் மருத்துவப்பட்டத்தின் பின் ஒரு துறையில் தேர்ச்சிபெற்றவராகவும் 20 வீதமானவர்கள் ஒரு துறையில் சிகிச்சையளிக்கப் பயிற்றப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். 10 வீதமானவர்கள் மருத்துவ நோய் தடுப்புப் பகுதியிலும் 5 வீதமானவர்கள் மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும் 5 வீதமானவர்கள் வைத்தியசாலை நிர்வாகத்திலும் ஈடுபடுகிறார்கள். அடிப்படை மருத்துவ ஆராய்ச்சியில் ஒரு சிலரே ஈடுபடுகிறார்கள்.

மருத்துவத் தனியார் பிரிவில் இத்துறை சமீபகாலமாக வளர்ந்து வருவதால் தாக் கவனிப்பு மிக முக்கியம். மருத்துவத்தடுப்புப்பிரிவும் கர்ப்பிணி, குழந்தைகள் பராமரிப்பு, நோய்த் துடுப்பு மருந்தளித்தல், போசாக்குணவு, சுத்தமான நீர், குப்பைகழிவ கற்றல் மற்றும் அதிகமாகப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தும் நிர்வகித்தல் போன்ற பல முக்கிய பங்காற்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சுவேலி, உலவிற்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய



# மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ் - 16.09.2007

## பாலாலயத்தில் பிரார்த்தனை

மஹாகும்பாபிஷேகம் நடைபெறும் ஆலயங்களிலே பாலாலயத்தில் பிம்பத்திலே எழுந்தருளி இருக்கும் ஜீவ சக்தியை அமைதியான பிரார்த்தனை மூலமும் அன்பான வேண்டுகோளின் மூலமும் கும்பத்தில் எழுந்தருளச் செய்யும் மகத்தான கைங்கர்யம் பிரதம சிவாசார்யருடையதாகும். அந்த நேரத்தில் அவர் விநாயகரிடம் ஒரு உருக்கமான வேண்டுகோளை முன்வைக்கிறார்.

''விநாயகப்பெருமானே! உம்முடைய மகத்துவத்தை சனகாதி முனிவர்களாலேயே அறியமுடியவில்லை. கேவலம் வயிற்றை வளர்க்கும் என்னால் எப்படி முடியும்? ஆகவே என்மேல் இரக்கம்கொண்டு, கிருபாநிதியே! கும்பத்தில் வந்து எழுந்தருளுவீராக!

''தஸ்மாத் கிருபாவஸாத் கும்பே
ஆகச்ச கிருபாநிதே''

என்ற மந்திரம் அவரை கும்பத்திற்கு வருவிக்கிறது. அதன்மேல் யாகத்தில் நடைபெறும் பூஜைகளினால் அந்த திருவருட் சக்தி கும்பாபிஷேகத்திலன்று விநாயகப் பெருமானது திருவருவத்தில் பிம்பத்தில் சான்னியத்மாகிறது. அதன் மேல் பக்தர்களுடைய பிரார்த்தனைக்குச் சாதகமாக திருவருள் புரிகிறார் விநாயகப் பெருமான். அச்சுவேலி உலவிற்குளம் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான் சர்வசித்து வருடத்தில் நடைபெறும் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகத்தின் பயனாக மக்களுக்கு எல்லாச் செல்வத்தையும் அளித்து நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ துணை புரிவாராக.

வேதாகம ஞானபாஸ்கரன் தா.மகாதேவகுருக்கள்,
காயத்திரி பீடம்,
இணுவில் மேற்கு, இணுவில்.

## ஆலயப் பிரதம குருவின் பிரார்த்தனை

பழமை நிறைந்த இந்து சமயத்தின் அடித்தளம் ஆலயங்களே ஆகும். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது பழமொழி. இந்த சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கி ஒருமைப்பாட்டை உண்டாக்க வல்லவை ஆலயங்களே ஆகும். இந்துசமயக் கடவுளர்க்கென்று தனித்தனியாகக் கட்டப்பட்ட கோயில்கள் பல நம் நாட்டில் உள்ளன. விநாயகருக்கென்று தனிக் கோயில்கள் பலவும் உள்ளன. எக்காரியத்தை நாம் செய்யத் தொடங்கும்போதும் விநாயகரை வழிபட்ட பின்னரே நாம் அவற்றைத் தொடங்குதல் வழக்கம். சைவம், வைணவம் போன்றவற்றில் மட்டுமன்றி புத்தம், சமணம் போன்ற பிற சமயங்களிலும் யானை முகன் வழிபாடு நிலவுவது விநாயகர் வழிபாட்டின் சிறப்பினை உணர்த்தும்.

அந்தவகையில் இன்றைய தினத்தில் அச்சுவேலி உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இந்த கும்பாபிஷேகத்தைக் காணும் நாம் பெரும் பேறு பெற்றவர்களாகவும் இந்தப் பிறவியின் பயனை அடைந்தவர்களாகவும் ஆகின்றோம். இன்றைய கும்பாபிஷேகம் எந்த ஒரு குறையும் இன்றி நடைபெறவும், அடியார்கள் எல்லோரும் எல்லா வளமும் பெற்று வாழவும் எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமானின் பாதங்களைப் பணிகின்றேன்.

சிவஸ்ரீ.கு.வை.விருத்தகிரீசக்குருக்கள், பிரதமகுரு.
ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில், உலவிற்குளம்.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஆன்மீக ஆரோக்கியத்தினூடாக உடல், உள, சமூக ஆரோக்கியத்தை கட்டியெழுப்புவது இந்துப் பண்பாடு என்றும் கருத இடமுண்டு. ஆன்மீக ஆரோக்கியம் என்பது உலகளாவிய ரீதியிலும் முதன்மை பெறும் ஒரு விடயமாகும். இதனை உணர்ந்தே ஔவையார் ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' எனக் கூறியுள்ளார். கோயில்கள் பண்பாட்டின் நிலைக்களன்.

அச்சுவேலி உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் நிகழும் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் அடியவர்களின் மன இருளை அகற்றி மாசிலா நல் வாழ்வை நல்க வேண்டுமென இறையிடம் இறைஞ்சுகின்றேன்.

திருவருள்மிகு சித்திவிநாயகர் சகல சித்திகளையும் சௌபாக்கியங்களையும் நல்கி அருள்பாலிப்பதுடன் உலகத் தரத்திற்கு எமது சமூக, பொருளாதார, ஆன்மீக வளம் பெருக்கும் வல்லமையையும் ஈந்தருளவேண்டும்.

ஐங்கரனின் பாதார விந்தங்களைப் பற்றிப் பிடித்து சங்கத் தமிழ் மூன்றையும் வளர்த்தெடுப்போமாக. வையத்துள் வாழ்வாங்கு வாழ வகை செய்யவேண்டும் என்ற இறைஞ்சுதலுடன் எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்றும் இறைவனிடம் உளமாரப் பிரார்த்திப்போமாக.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

## கோப்பாய் பிரதேச செயலரின் ஆசிச்செய்தி

அச்சுவேலியில் வீற்றிருந்து அருளாட்சி நல்கும் சித்திவிநாயகப் பெருமான் இன்று குடமுழுக்கு விழாக் காண்கிறார். மிக நீண்டகால வரலாற்றையும் தனித்துவங்களையும் தன்னகத்தே கொண்டதாக விநாயகப் பெருமானுக்குரிய இவ்வாலயம் விளங்குகின்றது.

'இறைவி, இறைவன் இரண்டும் ஒன்றாகித் தாயாய், தந்தையாய், சக்தியும் சிவனுமாய், உள்ளொளியாகி உலகெலாம் திகழும் பரம்பொருள்' என பாரதியார் விநாயகரைக் காண்பது இங்கு நினைவு கூரத்தக்கது. அத்தகு பரம்பொருள் அச்சுவேலி உலவிற்குளம் என்னும் பதியில் வீற்றிருந்து தன்னை நாடும் அடியவர்களை நல்லாற்றுப்படுத்துவது இப்பிரதேச மக்கள் செய்த தவப்பயனாகும். மேலும் இவ்வாலயத்தை புனரமைப்புச் செய்வதில் முன்னின்று உழைத்த ஆலய நிர்வாகிகளுக்கும் விநாயக அடியார்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குடமுழுக்கு விழாச் சிறக்கவும் விநாயக அடியவர்கள் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யவும் பிரார்த்திக்கின்றேன்.

சி.ஏ.மோகன்றாஸ்,
பிரதேச செயலர், கோப்பாய்.



அச்சுவேலி, உலவிற்குளம், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முகப்புத் தோற்றமும் மூலவர் திருக்கோலமும்

**கும்பாபிஷேக முகூர்த்தம்**

**இன்று பஞ்சமித் திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 7 மணி 18 நிமிடம் முதல் 8 மணி 18 நிமிடம் வரையுள்ள கன்னி லக்கின சுபவேளை.**

## ஆலய வரலாறு - ஒரு குறிப்புரை

### அச்சுவேலி - உலவிற்குளம்

யாழ்ப்பாணச் சரித்திரத்துடன் தொடர்புடைய தொன்மையான கிராமங்களுள் ஒன்று அச்சுவேலி. வல்லிவெளி எனப் பெறும் பெருவெளிப் பிரதேசத்திற்கு அணுக்கமாக அமைந்த மருத நிலச் சூழல் உலவிற்குளம்.

### சித்திவிநாயகர் எழுந்தருளல்

ஒல்லாந்தராட்சிக் காலத்தில் (கி.பி. 1775) அச்சையூர்க் காராளரான சிதம்பர இராமர் என்பவர் மருதங்கேணியில் வைக்கோல் வாங்கி வண்டியில் ஏற்றிவந்தார். அவ்வைக்கோலுடன் இருந்த பேழையொன்றிற்குள் விநாயகப் பெருமானும் எழுந்தருளினார். தனக்கு உலவிற்குள வயற்பதியில் ஆலயம் அமைக்குமாறு சொப்பனத்துரைத்தார். இதன்படி உலவிற்குளம் பதியில் அரச மரத்தடியில் விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்து விளக்கேற்றிப் பூசிக்கலாயினர்.

### ஆலய வளர்ச்சி

விநாயகப் பெருமானின் பேரருளுக்கு ஆட்பட்ட அடியவர்களின் துணையோடு ஆலயம் பெருவளர்ச்சி கண்டது. ஆலயப் பூசைக் கிரமங்களை அந்தணோத்தமர்கள் பேணத் தொடங்கினர். இவர்களுள் சிவஸ்ரீ செ.குமாரசாமிக் குருக்கள் முதன்மையாகக் குறிப்பிடப்படவேண்டியவர். ஆலயப் பூசைக் கிரமங்கள் பற்றிய பல பத்ததிகளை ஆக்கிய பெருமைக்குரியவர். தற்போது அவர் தம் பேரனார் சிவஸ்ரீ கு.வை.விருத்தகிரீசக் குருக்கள் ஆலய நித்திய நைமித்தியக் கிரியைகளைச் சிறப்புற நிறைவேற்றி வருகின்றார்.

### ஆலய மஹோற்சவம்

ஆடிப்பூரணையை நிறைவாகக்கொண்டு பதினொரு தினங்கள் மகோற்சவம் இடம்பெறுகிறது. இதைவிட மாத சதுர்த்தி அபிஷேகம், பெருங்கதை விரதம், புராண படனங்கள் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. ஈழத்தின் கலைகள், வாணவேடிக்கை நிகழ்வுகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஆலயமாக இவ்வாலயம் திகழ்கிறது.

### பாலஸ்தாபனமும் கும்பாபிஷேகமும்

24.02.2004 பாலஸ்தாபனம் நடைபெற்று விநாயக மெய்யடியார்களின் மேலான ஒத்துழைப்புடன் இன்று (16.09.2007) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமித் திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தி யோகமும் கூடிய காலை 7 மணி 18 நிமிடம் முதல் 8 மணி 18 நிமிடம் வரையுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில் விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது.

நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைபெற்று ஓங்க விநாயகப் பெருமானின் திருவருளுக்காகப் பிரார்த்திப்போம்.

**''வித்தக விநாயக விரைகழல் சரணே''**

**-அடியவன்.**

**மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.**

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகளின் வாழ்த்துச் செய்தி

அச்சுவேலி உலவிற்குளம் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் மஹாகும்பாபிஷேக விழாக் காண்பதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகிறோம்.

விநாயகப் பெருமான் பிரணவ சொரூபி. படைப்புக்கிணையவன், பண்ணவர் நாயகன், உலகெலாம் காக்கும் ஒப்பற்ற முதல்வன். இத்தகு பெருமைகளோடு அச்சுவேலிப் பதியில் உலவிற்குளம் என்ற மருத நிலத்தில் குடியமர்ந்து வேண்டுவார் வேண்டும் வரம் ஈந்தருளும் வள்ளலாக அருள் செய்கிறார்.

காலநேர வர்த்தமான சூழலுக்கேற்ப நீண்ட இடைவெளியின் பின் இவ்வாலயத்தை விநாயகருடைய பேரருளால் புதுப்பித்த அடியவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மஹாகும்பாபிஷேக நிகழ்வுகள் சிறக்கவும் எம்பெருமானின் பேரருள் வியாபிக்கவும் வழுத்தி அமைகிறோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள் .

## நினைந்து நினைந்து வழிபடும் தெய்வம்

அச்சுவேலி வாழ் சைவ மக்கள் நின்றும் இருந்தும் கிடந்தும் வழிபடும் தெய்வம் உலவிற்குளம் சித்திவிநாயகப் பெருமான் ஆவார். காலங்காலமாக பக்திப் பரவசத்தோடு வழிபடும் புனித ஆலயம் இதுவாகும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் இங்கு சென்று உரை ஆற்றிய வாய்ப்பை எண்ணிப் பார்க்கிறேன். கற்றவர்களும், மற்றவர்களும், பக்தர்களும் பாமரரும் நினைந்து நினைந்து வழிபடும் தெய்வம் விநாயகப் பெருமான் என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## அமைதியும் தர்மமும் நிலைத்திடப் பிரார்த்திப்போம்

அருட்சிறப்புமிக்க அச்சுவேலி சித்திவிநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது குறித்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். 'அத்தி முகவனை நித்தம் நினைப்ப வர் சித்த மகிழ்வோடு முத்தி பெறுவாரே' என்பது ஆன்றோர் வாக்கு. அச்சுவேலி வாழ்மக்கள் அல்லும் பகலும் தம்மை அர்ப்பணித்து வளர்த்த இத்திருக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப்பொலிவு பெற்றிருப்பது சிறப்புக்குரியது. ஆன்மிக அறிஞர் அச்சுவேலிக் குமாரசுவாமிக் குருக்களை அறியாதவர்களில்லை. அப்பெருந்தகை எழுதிய பல நூல்கள் ஆலய கும்பாபிஷேகக் கிரியைகளின்போது பயன்படுத்தப்படுவதை யாம் அறிவோம். ஆலய பூசை விதிகள் முதல் கிரியைகளின் விளக்கங்களைத் தந்த அப்பெருமகனாரை இவ்வுலகுக்கு தந்த சித்தி விநாயகருக்கு பல்வேறு சிறப்புக்களுண்டு. இக்கிராமத்து மக்கள் பொங்கிப் படைத்து நேர்த்தி செய்து வழிபடும் இத்திருத்தலத்தில் விடிய விடியத் திருவிழா நடைபெற்ற காட்சிகள் மறக்கமுடியாதவை. வயல்கள் எல்லாம் வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, சிகரங்கள், பந்தல்கள் யாவும் புதுமையாக அமைக்கப்பட்டு கலைநிகழ்ச்சிகள் கணபதிக்கு அர்ப்பணம் செய்யும் வழமை இவ்வாலயத்தின் தனித்துவமாகும். அச்சுவேலி வாழ் மக்களை அறிஞர்களாக்கிய வித்தக விநாயகர், சித்திகள் பல வழங்கி சீர் செல்வம் நிறைந்த திருவூராக மிளிரவைத்துள்ளார். மக்கள் மகிழ்வோடு காணிக்கை வழங்கி ஆலயத்தை புதுப்பொலிவு பெறச் செய்தமை பாராட்டுக்குரியது. எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகத்தோடு இம்மண்ணில் அமைதியும் தர்மமும் நிலைத்திடப் பிரார்த்தித்து ஆலயத் திருப்பணியில் அக்கறை கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.

## ஆலய தர்மகர்த்தாவின் பிரார்த்தனையுரை

எங்கள் யாவரையும் வாழவைக்கும் எம்பெருமான் இன்று திருப்பெருங் குடமுழுக்குக் காண்கிறார். விநாயக மெய்யடியார்களின் அரும் பெரும் முயற்சி, நீண்ட நாள் கனவு இன்று நனவாகிறது.

மருத நிலச் சூழலை தனது இருப்பிடமாக வரித்துக் கொண்ட எம்பெருமானை மெய்யன்புடன் வழிபாடாற்றிய பலர் உலகெங்கணும் சீருஞ் சிறப்பும் பெற்று வாழ்கின்றனர்.

வெவ்வினைகளை வேரறுத்து வேட்கை தணிவிக்கும் எம்பெருமானின் திருக்குடமுழுக்குப் பெருவிழா சிறப்புற உழைத்த உள்ளங்கள் யாவற்றிற்கும் எம்பெருமானின் திருப்பெருங் கருணை கிடைப்பதாக.

க.சண்முகலிங்கம்,
பரம்பரைத் தர்மகர்த்தாவும் நிர்வாகியும்
(முன்னாள் செயலாளர், நிதியமைச்சு).

## அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அதிபரின் பிரார்த்தனை உரை

கற்றோரும் கவின் பெருகு வல்லோரும் வாழ்பதி அச்சு நகரின் கண்ணே, சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் பூசித்த தலமாகவும், இன்று அவரது பரம்பரையில் தோன்றிய சிவஸ்ரீ விருத்தகிரீசக் குருக்களை பிரதம குருவாகவும் கொண்டு விளங்கும் உலவிற்குள சித்திவிநாயகர் ஆலயம் கடுவினை கடிந்திட, கரம் எடுத்து அருளினை வேண்டிட அடியார் தம் உளம் உறை பிள்ளையார், புதுப் பொலிவுடன் புனராவர்த்தனம் செய்யப்பட்டு, பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் காண்கிறார். வரம் பல நல்கி சிந்திப்பார் சிந்தை மகிழ அச்சுநகர் மேவு புகழ் கொண்டு வண்ணக் கலை கொஞ்சும் சிற்ப வேலைகளுடனும் வானுற ஓங்கிய கோபுரங்களுடனும், மண்மீது மன்பதை துயர் தீர்த்து அஞ்ஞான இருள் அகற்றி மெஞ்ஞான ஒளி ஏற்றவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

எஸ்.மாணிக்கவாசகர்.

**''வித்தக விநாயக விரைகழல் சரணே''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்துவெளி மக்கள் பயின்ற மொழி தமிழே!



சிந்துவெளி நாகரிகம் என்பது திராவிட நாகரிகமே என்று சோவியத் மற்றும் பின்லாந்து அறிஞர்கள் நிறுவியுள்ள நிலையில் அங்கு காணப்படும் முத்திரைகளில் உள்ள எழுத்துகள் தமிழ் எழுத்துகளின் அத்திபாரமே என்று நிறுவுகிறார் பேராசிரியர் **இரா.மதிவாணன்.** அவர் எழுதியுள்ள **சிந்துவெளி எழுத்தின் திறவு** என்ற தென்னிந்திய சைவ சித்தாந்த கழக வெளியீட்டு நூலில் இருந்து இக் கட்டுரை தொகுக்கப்பட்டது.

தமிழில் பண்டுதொட்டே குறில், நெடில் வேறுபாடுகள் எழுத்தமைப்பில் பேணிக்காக் கப்படுகின்றன. சிந்திவெளி அசையெழுத்திலும் இதே நிலை காணப்படுவது வியப்பளிக்கிறது.

எழுத்தொலிப்புக்குக் காலம் கணிப்பது இசைத்துறையில் மட்டும் நிகழ்வதொன்றாகும். ஆயின் இயற்றமிழுக்கு இலக்கணம் வகுத்த புலவர் பெருமக்கள் எழுத்துகளுக்கு மாத்திரை வகுத்திருக்கின்றனர். குற்றியலுகரம், மெய்யெழுத்து ஆகியவை அரைமாத்திரை நேரம் ஒலிக்கும் என்றும் மகரக் குறுக்கம் கால்மாத்திரை நேரம் ஒலிக்கு என்றும் வகைப்படுத்தியுள்ளனர். இதிலிருந்து சிந்துவெளி அசையெழுத்துக் காலத்திலேயே இசை வளர்ந்திருக்கவேண்டும் என்றும் இசைப் பாடல்களை மாத்திரை பிசகாமல் எழுதுவதற்கென்றே சிந்துவெளி அசையெழுத்துகளில் குறில், நெடில் வேறுபாட்டுக் குறியீடுகள் சேர்த்திருக்கிறார்கள் என்றும் அறிய முடிகிறது.

மரபிலக்கணத்தின் வண்ணம் 19 கண்ணிமைக்கும் அல்லது கைதொடிக்கும் நேரம் ஒரு மாத்திரையென்று கருதப்பட்டது. சிந்துவெளி முத்திரைகளில் பலவிடயங்களில் ஒவ்வொரு துணைக்கோடும் அரை மாத்திரை நேர அளவைக் குறிக்கிறது. உயிரெழுத்தின் அடையாளக் குறியீடுகள் உயிரெழுத்துடன் சேர்க்கப்படுவதில்லை. உயிரின் அளவே உயிர்மெய்யெழுத்துக்கும் உரியதாகிறது. இதே நிலை சிந்துவெளி அசையெழுத்திலும் உள்ளதால் சிந்துவெளி மொழியைத் தமிழ் என்றே துணிந்து கூறமுடிகிறது.

### இருமொழி எழுத்துச் சான்றுகள்

சிந்துவெளி எழுத்தைப் படிப்பதற்கு இருமொழியெழுத்துச் சான்றுகள் கிடைக்கவில்லையென்பது நெடுநாளாகப் பெருங்குறையாக இருந்தது. பேராசிரியர் இந்திரபாலர் யாழ்ப்பாணத்தருகிலுள்ள ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் கண்டெடுத்த ஒருமொழி ஈரெழுத்து முத்திரையில் அக்குறை நீங்கியது. கி.மு.மூன்றாம் நூற்றாண்டளவில் பெருமன்னராக விளங்கிய சாதவாகன அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் இருமொழிகளில் மன்னன் பெயர் எழுதப்பட்டிருப்பது நமக்கு முழுமையாகக் கிடைத்த இருமொழி எழுத்துச் சான்றாகும்.

நாணயத்தின் ஒரு பக்கத்தில் தமிழில் அரசன் வசிட்டி மகன் திரு சதகணி என்றும் மறுபக்கத்தில் பிராகிருத மொழியில் சராஜோ வசிட்டி புதச சிரி சதகணி என்றும் எழுதப்பட்டுள்ளது. இதனை மேனாள் தொல் பொருளாய்வுத்துறை இயக்குநர் நாகசாமி நன்கு புலப்படுத்தியுள்ளார். அரசன் பெய ருக்கு முன்னாலுள்ள 'ச' என்னும் எழுத்து நாணயத்தின் மதிப்பைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். சிந்துவெளி முத்திரைகளிலும் இயற்பெயரின் முன் இத்தகு எழுத்து ஒன்று அல்லது இரண்டு இடம்பெற்றுள்ளன. இது மேலும் ஆய்வு செய்யத்தக்கது.

சாதவாகன மன்னரின் இருமொழி நாணயத்திலிருந்து அக்காலத்தில் இந்தியாவில் தமிழும் பிராகிருதமுமாகிய இரண்டே பேச்சு மொழிகள். ஆட்சி மொழியளவில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதும் வணிகப் பெருக்கத்தால் பிராகிருத மொழியுடன் தமிழிலும் மன்னன் பெயர் இடம்பெற நேர்ந்தது என்றும் தெரிகிறது. இருமொழிக்கும் பிராமி ஒன்றே எழுத்து வடிவாக ஏற்கப்பட்டது என்பது புலனாகிறது.

சேம்சு பிரின்சப் என்பவர் கிரேக்கமொழியும் பிராமியும் பயன்படுத்தப்பட்ட இருமொழி நாணயம் ஒன்றைக் கண்ட பிறகே பிராமியெழுத்தைப் படித்தறிந்தார். ஆந்திர மாநிலத்து கருநூல் மாவட்டத்து ஆலூருக்கு அருகில் புத்தருக்கு முந்திய காலத்து நாணயம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதில் ஒரு பக்கத்தில் குதிரை வடிவமும் மறுபக்கத்தில் சிந்துவெளி எழுத்துகளும் உள்ளன. அதனை நான் 'நந்தன்' எனப் படித்துக்காட்டினேன். இதிலிருந்து பாடலிபுத்திரத்தை ஆண்ட நந்தர் காலம் வரையில் சிந்துவெளி எழுத்தை அருகிப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

அகழ்வாராய்ச்சியாளர்கள் முயன்றால் இன்னும் பல இருமொழி எழுத்துச் சான்றுகள் கிடைக்கக்கூடும். ✱

## வருவதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்

சுவாமி விவேகானந்தர் அப்போது பாரிசில் தங்கியிருந்தார். அங்கு அவரது நண்பர்கள் சுவாமிஜியை அருங்காட்சியகம், மாதாகோயில்கள் என்று பல இடங்களுக்கும் டிராம் அல்லது பேருந்து போன்றவற்றில் அழைத்து சென்று காட்டினார்கள்.

சுவாமிஜியை ஏற்கனவே அறிமுகமாகியிருந்த புதிய நண்பர்களில் கௌண்டஸ் ஆப் கெய்த்நெஸ் (countess of caithness) என்ற அம்மையாரும் ஒருவர்.

அந்த அம்மையாருக்கு சுமார் அறுபத்தைந்து வயதிருக்கும். அவர் ஐரோப்பா முழுவதும் டச்சஸ் டி போமர் (Duchessede pomar) என்ற பெயரில் பிரபல்யமானவர்.

அந்த அம்மையார் ஆன்மீகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஆன்மீகத்தை வளர்க்கும் பொருட்டு தன்னுடைய திறமை, நேரம், செல்வம் ஆகியவற்றறை அவர் தாராளமாக செலவழித்து வந்தார்.

ஒரு முறை சுவாமிஜி, இந்த அம்மையாருடன் ஒரு 'கோச்சு' வண்டியில் பாரிஸ் நகர வீதியில் சென்று கொண்டிருந்தார்.

வண்டி நகரப்புறத்தைக் கடந்து ஒரு கிராமத்து வழியாக சென்று கொண்டிருந்தது.

வழியில் ஒரு வேலைக்காரப் பெண்மணியுடன் ஒரு சிறுவனும், சிறுமியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்ததும் வண்டிகாரன் சட்டென்று வண்டியை வீதியோரமாக நிறுத்தினான். கோச்சியிலிருந்து இறங்கி அவன் அந்த இரண்டு குழந்தைகள் அருகே சென்றான். அவர்கள் தலையை அன்போடு வருடிக் கொடுத்து சிறிது நேரம் அவர்களை கொஞ்சிவிட்டு திரும்பினான்.

பிறகு கோச்சில் அவன்தன் இருப்பிடத்தில் அமர்ந்து கடிவாளத்தை கையில் எடுத்துக்கொண்டு குதிரைகளை ஓட்ட ஆரம்பித்தான். இந்த காட்சியை பார்த்த அம்மையர் மிகவும் அச்சரியம் அடைந்தார்.

அதனால் அவர் வண்டிக்காரனிடம், 'ஏனப்பா நீ அப்படிச் செய்தாய் அந்தக் குழந்தைகளைப் பார்த்தால் பணக்கார வீட்டுக் குழந்தைகள் போல் காணப்படுகிறார்கள்!' என்று விசாரித்தார்.

அதற்கு வண்டியோட்டி தன் இருக்கையில் இருந்தபடியே அம்மையாரைத் திரும்பிப்பார்த்து. 'அம்மா! நான் பாரிஸ்நகரில் உள்ள ஒரு வங்கியில் மேலாளராக இருந்தேன். சமீபத்தில் அந்த வங்கி வங்குரோத்து அடைந்துவிட்டது. என்னிடம் இருந்த சிறு சேமிப்பில் இந்த வண்டியையும், குதிரைகளையும் வாங்கி வண்டியோட்டும் இந்த புதிய தொழிலுக்கு வந்து விட்டேன்.

''இப்போது ஒரு வாடகை வீட்டில் என் மனைவியோடும் இரண்டு குழந்தைகளோடும் வாழ்ந்து வருகிறேன். வீட்டுவேலைகளைக் கவனித்து கொள்ள ஒரு வேலைக்காரியையும் அமர்த்தியிருக்கிறேன். நீங்கள் பார்த்த அந்த குழந்தைகள் இருவரும் என்னுடைய குழந்தைகள்.'' என்று கூறினான்.

வாழ்க்கையில் உயர்மட்டத்திலிருந்தது கீழ்மட்டத்துக்கு சரிந்த போதும், அதனால் பாதிக்கப்படாத வண்டியோட்டியின் உயர்ந்த மனநிலையும் மன உறுதியும் சுவாமி விவேகானந்தரை மிகவும் கவர்ந்தது.



சுவாமிஜி மேற்கூறிய இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, 'நடைமுறை வேதாந்தம்' என்பதற்கு இந்த வண்டியோட்டியின் வாழ்க்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டு. பகவத் கீதையின் கருத்தாகிய 'வருவதை ஏற்றுக்கொள்ளும்' மனப்பக்குவம் அவனுக்கு கடவுள் அருளால் தான் ஏற்பட்டிருந்தது.

அத்தகைய உயந்த உள்ளத்தை அவனுக்கு கொடுத்த கடவுளுக்கு நாம் மனதார நன்றி சொல்லத் தான்வேண்டும். உண்மையிலேயே அவன் ஒரு வேதாந்திதான்!'' என்று பலமுறை சொல்லியிருக்கிறார். ★

# வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் குடாநாட்டின் திராட்சைச் செய்கை!

யாழ். மாவட்டத்தில் விவசாயம் - நெற்செய்கை மற்றும் தோட்டப் பயிர்ச்செய்கை முதலிய ன மட்டுமல்ல ஒருகாலத்தில் அமோகமாகப் பயிரிடப்பட்டு கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் ஏற்றுமதியான திராட்சைப்பழ செய்கையும் இப்போது பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இளவாலை, உரும்பிராய், அளவெட்டி, ஊரெழு , புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் திராட்சை அதிகளவில் செய்யப்படுகின்றது. வலி.வடக்கு, வலி.தெற்கு, வலி.கிழக்கு ஆகிய பிரதேசங்கள் திராட்சைச் செய்கைக்கு உகந்த பிரதேசங்களாகக் காணப்படுகின்றன.

திராட்சைப் பழ செய்கையில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வந்த பலர் ஏ-9 பாதை மூடப்பட்டதையடுத்து உற்சாகம் குன்றிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். முன்னர் கொழும்புக்கு ஏற்றுமதியானமையால் திராட்சை உற்பத்தி பெருகியிருந்ததோடு அதில் அதிகமானவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடவும் செய்தார்கள்.

தற்பொழுது இத்தொழில் முடங்கிக்கொண்டு



செழிப்புடன் திராட்சைக்குலைகள்

வருகின்றது. இலட்சக்கணக்காகப் பணத்தை முதலீடு செய்தவர்கள் ஏக்கத்துடன் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். இவர்களின் இன்னல்களைப் போக்க எவரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. அரச அதிகாரிகளோ, ஏனைய சமூகத் தொண்டு நிறுவனங்களோ இவர்களுக்குக் கைகொடுத்து உதவுவதாகத் தெரியவில்லை.

நிலைமைகள் சீரடையும் என எதிர்பார்த்திருந்த திராட்சைச் செய்கையாளர்கள் இப்போது விரக்தியின் விளிம்புக்கே வந்துவிட்டார்கள்.

எவ்வளவு ஆர்வத்துடன் இத்தொழிலில் முன்பு ஈடுபட்டிருந்தார்களோ அந்த ஆர்வமும் அக்கறையும் குன்றிக் குறுகிவிட்ட நிலையில் பலர் தம் திராட்சைத் தோட்டங்களை அப்படியே அழியவிட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் திராட்சைப் பயிர்களை அழித்துவிட்டு வேறு இலாபம் தரும் பயிர்களைச் செய்வதற்கு ஆரம்பித்துள்ளார்கள்.

இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அக்கறை காட்டவேண்டிய விவசாயத் திணைக்களத்தினர் இந்த விவசாயிகள் விடயத்தில் எது

## அதில் ஈடுபடுவோரைப் பாதுகாக்க உதவிக்கு வருவதற்கு எவருமில்லையா?

வித அக்கறையும் எடுத்துக் கொள்ளவில்லையென்று கூறப்படுகின்றது. நிலைமைகள் சீராகும்வரை தமது தோட்டங்களை பராமரிக்கும் வகையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதற்கான ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை.

இவர்களின் எதிர்கால பாதுகாப்புக்கென காப்புறுதி வசதிகளோ, ஓய்வூதியத் திட்டங்களோ கிடையாது. இந்த முயற்சிகளில் அவர்களை ஈடுபடச் செய்வதற்கான திராட்சைப் பழச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கம் எதுவும் செயற்படுத்தப்படவில்லை. அந்தவகையில் அவர்களை எவரும் நெறிப்படுத்தவும் இல்லை.

இதேவேளை இத்தகையவர்களை சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளவேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கை எடுக்கும்படியும் அரச அதிபர் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் காரியாலயங்களுக்கு சுற்றுநிருபம் அனுப்பியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதனை நடைமுறைப்படுத்த சமூகசேவைகள் அலுவலர்களுடன் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களையும் இணைந்து செயற்படும்படி அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும்' தெரியவருகின்றது. சில பகுதிகளில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டு வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

திராட்சைச் செய்கை என்பது ஏனைய பயிர்ச் செய்கைகளைப் போன்றதல்ல. அதனைச் செய்வதற்குப் மிகப்பெரிய அளவில் மூலதனம் தேவைப்படுகின்றது.

திராட்சைக் கன்றுகளை வைப்பதற்கென குழிகள் வெட்டப்பட்டு அவை பசளையிடப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குப் பின்னர் ஏற்கனவே நடப்பட்ட நிலையில் இருந்த திராட்சைக் கன்றுகள் அவற்றில் வைக்கப்படுகின்றன. அந்தக் கன்றுகள் வளர்ந்து வந்ததும் அதற்கென பந்தல் அமைக்கவேண்டி ஏற்படுகின்றது. அந்தப் பந்தலுக்கான தூண்கள், மரங்கள், கம்பிகள் என்பன பெறப்பட்டு பந்தல் போடப்படுகின்றது.

அதன்பின்னர் சுற்றிலும் வேலி அமைக்கப்படுகிறது. இவ்வாறு முதற்கட்டப் பணிகள் பூர்த்தியடைகின்றன.

பின்னர் வளர்ந்துவரும் திராட்சைக் கொடியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதாவது கிருமிநாசினி விசிறுதல், பசளை இடுதல், நீர் இறைத்தல் போன்ற செயற்பாடுகளை ஒருகால அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளவேண்டும். இவை அனைத்தும் செய்யப்பட்டால் தான் அதிலிருந்து பயனை முழுமையாகப் பெறமுடியும்.

இவை அனைத்தையும் செய்ய ஒரு திராட்சைச் செய்கையாளருக்கு பெரும் தொகையான பணம் மூலதனமாகத் தேவைப்படுகின்றது. அந்த மூலதனத்தைத் திராட்சைப் பழ விற்பனை மூலம்தான் அவர் திரும்பப் பெறமுடியும்.

எனினும் இன்று அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு இக்கட்டான நிலையை யாரும் கண்டு கொள்ளவில்லை என்பது தான் வேதனையான விடயம்.

எதுவும் செய்யமுடியாத காரணத்தால் பல இலட்சம் ரூபா மூலதனத்தைக் கொட்டி உண்டாக்கப்பட்ட பெருமளவான திராட்சைத் தோட்டங்கள் இன்று கைவிடப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

ஏ-9 பாதை மூடப்பட்டு ஏற்றுமதி தடைப்பட்டதன் காரணமாக இன்று குடாநாட்டில் ஒரு கிலோ திராட்சைப் பழம் 40 ரூபா முதல் 80 ரூபா வரை விலை போகின்றது. ஏற்றுமதி செய்யப்படும் வேளையில் அதன் விலை 150 ரூபா முதல் 200 ரூபா வரை.

தற்போதைய விலைக்கு திராட்சைப் பழத்தை விற்பனை செய்வதன் மூலம் தாம் இட்ட மூலதனத்தில் பத்து வீதத்தைக் கூடப் பெறமுடியாமல் திண்டாடுகிறார்கள் திராட்சைச் செய்கையாளர் கள். இவற்றைவிட குடாநாட்டில் தற்போது கிருமிநாசினி, உரம் ஆகியவற்றின் விலைகள் பல மடங்குகள் உயர்ந்துள்ளன. இந்நிலையில் திராட்சைச் செய்கையாளர்கள் எவ்வாறு தமது பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியும்.

எனவே பாதிக்கப்பட்டுள்ள இந்தத் திராட்சைச் செய்கையையும் செய்கையாளர்களையும் பாதுகாத்து, அதனை தொடர்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு உரியதாகும்.

அத்துடன் பாதிக்கப்பட்ட திராட்சை செய்கையாளர்களுக்கு அரசுடன் தொடர்புகொண்டு உரிய நஷ்ட ஈடுகளை, நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவேண்டிய தேவையும் அவர்களுக்கு உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு அரசு முன்னிற்கையில் அதனை செயற்படுத்த வேண்டியவர்கள் மௌனம் காப்பது ஏன்? உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அரசிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அண்மையில் குடாநாட்டில் தங்கியிருந்த சமூகசேவைகள்

**புவபுத்திரன்**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இது தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுக்க அரச திணைக்களங்களின் தலைவர்கள் பொறுப்புடன் செயற்பட்டால் அதனைப் பெறுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த தன்னால் முடியும் எனவும், மக்களுக்கு தேவையானவற்றை




கைவிடப்பட்ட திராட்சைத் தோட்டம்

உரிய வேளைகளில் பெற்றுக்கொடுக்க அரச அதிகாரிகள் முன்வரவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். எனவே இதுவிடயத்தில் உரிய திணைக்களத்தினர் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி, செயற்பாடுகளை மேற்கொண்டு திராட்சைச் செய்கையாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIMA



# இணக்கமான கொடுப்பனவு திட்டங்கள் அது இலகுவானதாக இருக்க மாட்டாது.

நீங்கள் வர்த்தகத்தில் ஒரு பதவியைத் தீர்மானித்தால் சீமாவை (CIMA) பின்பற்றுங்கள். அது ஒரு விசேடமான தெரிவு. தற்போது அது இலகுவானதும் இணங்கக் கூடியதுமான தெரிவும் கூட.

புதிய, தற்போதுள்ள 'காா்ட்' உறுப்பினா்களுக்கென சுலபமான, இணக்கமான நம்பகத் தன்மையான 'காா்ட்' கொடுப்பனவுத் திட்டங்களை வழங்க, சீமா (CIMA) ஸ்ரீலங்கா முதன் முறையாக அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், சம்பத் வங்கி, செலான் வங்கி ஆகியவற்றை ஒருங்கே இணைத்துள்ளது. இத்திட்டங்கள் மூலமாக பதிவு, சந்தா, பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தலாம்.

சீமா(CIMA) ஒரு பாரிய முதலீட்டு நிறுவனமாகும். வெளிப்புற வர்த்தக சாதனைகளுக்காக, தனது உறுப்பினர்களை முழுமையாக தயார் படுத்தும் ஒரேயொரு பொறுப்பான நிறுவனம் எமது நிறுவனமாகும். சீமாவின் கல்வித்தரம் உலகின் மிகப் பெரிய, சிறந்த வேலைகொள் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கணக்கியல் கல்வித்தரத்தை அந்நிறுவனங்கள் பெரிதும் மதிக்கின்றன.

சீமாவை (CIMA) தெரிவு செய்வதன் மூலம், விருதுக்கான மகத்துவத்துக்கான ஒரு பதவியை நோக்கி நீங்கள் முதல் அடியை எடுக்கிறீர்கள்.

தற்போது அதை அடையாளப்படுத்த சிரமமில்லை அப்படித்தானே?!

நம்பக அட்டை(காா்ட்) கொடுப்பனவுத் திட்டங்கள் தொடா்பான மேலதிக விவரங்களுக்கு தொடா்பு கொள்வதற்கு:

Genesys

Banking partners of the CIMA flexible payment plan

NationsTrust Bank | American Express | SampathBank WE PRESENT YOUR FUTURE | SEYLAN BANK PLC

CIMA Sri Lanka Division, 356 Elvitigala Mawatha, Colombo 5

T: 2503880 | F: 2503881 | E: colombo@cimaglobal.com | www.cimaglobal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுமாறனின் உண்ணாவிரதமும் தமிழகத்தின் உணர்வலைகளும்



யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் உறவுகளுக் கென சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் படகு மூலம் அங்கு கொண்டு செல்ல எடுத்த தனது முயற்சி தடைப் பட்டதையடுத்து தமிழர் தேசிய இயக்கத் தலைவரும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான பழ. நெடுமாறன் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

ஈழத் தமிழர் விடயத்தில் தொடர்ந்து மௌனம் காத்துவரும் தமிழக அரசுக்கும், மத்திய அரசுக் கும் அவரது இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஒரு இக்கட்டைத் தோற்றுவித்திருக்கிறது.

அவர் ஆரம்பித்திருக்கும் இந்தப் போராட்டம் வெற்றிகரமாகத் தொடரப்பட்டால் 74 வயதான அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகப் பலரும் அஞ்சுகின்றனர். கடந்த புதன்கிழமை தனது படகுப் பணயம் தடுக்கப்பட்டுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டதையடுத்து அவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து விட்டார்.

இந்த நிலையில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு இந்த உணவுப் பொருள்களை அனுப்பும் விடயத்தில் சாதகமான நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டும். அதற்குத் தவறும் பட்சத்தில் பழ. நெடுமாறனின் உயிருக்கு ஆபத்து ஏதாவது ஏற்படுமானால் அது தமிழகத்தில் அரசியல் பூகம்பங்களுக்கு உருக் கொடுக்கலாம் என நோக்கர்கள் கருதுகிறார்கள்.

பல்வேறு நோய்களுக்கு உட்பட்ட நிலையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவரும் பழ. நெடுமாறனின் விடயத்தில் விரைந்து செயற்பட வேண்டிய தேவை இந்திய அரசியலில் ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக எழுந்துள்ள உணர்வலைகள் குறித்து இங்கு தரப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்களுக்காக சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள்களை அங்கு கொண்டு செல்ல எடுத்த முயற்சிகள் கை கூடாத நிலையிலேயே தமிழர் இயக்கத் தலைவர் பழ.நெடு மாறன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே அவர் தனது உண்ணவிரதப் போராட்டத்தைக் கைவிடுவதற்கு தமிழக அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அந்தப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உணவு, மருந்துகள் உள்ளிட்ட இன்றியமையாத தேவைகளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட நேரிட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்பாடு இன்று தகர்ந்து போயுள்ள நிலையில், அங்கு தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இராணுவ மோதல்கள் காரணமாக, இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களில் ஒரு கணிசமான பகுதியினர் சொந்த நாட்டிலேயே புலம் பெயர்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.இலங்கையில் வாழும் தமிழர்களின் இன் றைய இன்னல்களைக் களையும் விதத்தில் மனிதாபிமான உதவிகளைச் செய்திட முன்வரவேண்டும்.

ஏற்கனவே 2004 ஆம் ஆண்டின் ஆழிப்பேரலை பேரழிவையொட்டி, வெளிநாட்டவர் அளிக்க முன்வந்த உதவிகளை, இலங்கையில் தமிழக பகுதிகளுக்கு கொண்டு சேர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் போன்று, இந்தியா தற்போது மனிதாபிமான உதவிகளை அங்குள்ள தமிழ் மக்களுக்கு வழங்க முடியும்- என்றுள்ளது.

### சரத்குமாரின் கோரிக்கை

யாழ்.தமிழர்களுக்கு உணவு- மருந்துப் பொருள்களை அனுப்ப மத்திய- மாநில அரசுகள் விரைந்து செயல்படவேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரான நடிகர் சரத்குமார் வலியுறுத்தியுள் ளார்.

சென்னையில் அவர் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழர்களுக்கு உணவு, மருந்துப் பொருள்களை அனுப்புவதற்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என்று பழ.நெடுமாறன் காலவரையறையற்ற உண்ணாவிரதமிருந்து வருகிறார். இந்நிலையில் மத்திய அரசில் முக்கிய இடம்பெற்றிருக்கும் தி.மு.க.ஆளும் கட்சியாக இருக்கிறது. எனவே தமிழக முதலமைச்சர் மத்திய அரசோடு கலந்து பேசி நேரிடையாகத் தலையிட மருந்து மற்றும் உணவு பொருள்களை இலங்கைக்கு அனுப்பி, செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் மக்களுக்கு போய்ச்சேர ஆவன செய்திட வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தினூடே அனுப்ப அனுமதி மறுப்பதன் மூலம் இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் ஈழத்தமிழர்களுக்கு மன்னிக்க முடியாத துரோகமிழைத்து வருகின்றன என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் சொல்லொண்ணாத் துயரத்திற்குள்ளாகி உணவின்றி நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் மருந்துகளின்றி வாடி வதங்கி மடியும் துயரம் மிகுந்திருக்கின்ற வேளையில் அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தமிழகத்தில் சேகரிக்கப்பட்ட உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு அண்ணன் பழ.நெடுமாறன், மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாக்கப்பட்டுவிட்ட நிலையில்மத்தியஅரசு மனிதாபிமானத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள இனவாத அரசுக்கு துணை போகும் துரோகத்தைச் செய்து வருகிறது.

அந்தத் துரோகத்துக்கு தமிழகத்திலே ஆள்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசும் உடந்தையாக இருக்கிறது.

இருப்பினும் ஈழத் தமிழர்கள் அனாதைகள் அல்ல- தாய்த் தமிழகமும் கரம் நீட்டும்- குரல் எழுப்பும் என்பதை உணர்த்தவும் இந்தப் பிரச்சினையில் மனிதாபிமானமற்று செயற்பட்டு வரும் மத்திய- மாநில அரசுகளை மக்கள் மன்றத்திலே அடையாளப்படுத்தவும் அவர் மேற்கொண்ட படகுப் பயணமும் மேற்கொண்டிருக்கும் உண்ணாநிலை அறப்போரும் அந்த வகையிலே வெற்றி பெற்றிருக்கிறது. எனவே உண்ணாநிலை நிறுத்தப்பட வேண்டும் என்று விரும்பினாலும் கூட... இந்தப் பிரச்சினையில் மத்திய அரசும் தமிழக அரசும் ஈழத் தமிழர்களுக்கு மன்னிக்க முடியாத துரோகமிழைத்து வருகின்றன - என்றார்.

இதேவேளை- தமிழீழத் தமிழர்களுக்காக சென்னையில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பழ.நெடுமாறன் மேற்கொண்டு வரும் சாகும் வரையிலான உண்ணாப் போராட்டத்தை உலக நாடுகளின் கவனத்துக்கு கொண்டுசெல்ல அகிம்சை வழியிலானகவன ஈர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று சுவிஸ் தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

சுவிஸ் தமிழர் பேரவையினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாரத தேசத்தில் அறவழிப் போர் நடத்தும் ஐயா பழ.நெடுமாறனுக்கு சுவிஸ் தமிழர்களின் ஆதரவுக்கரங்களையும் அன்புக் கரங்களையும் தமிழர் பேரவை இந்த அறிக்கை மூலம் வெளிக்கொணருகிறது. மகாத்தா காந்தியின் வழி நின்று ஈழத்தமிழரின் மனித அவலத்தை தடுப்பதற்காக கடல்பயணம் முன்னெடுத்த பழ. நெடுமாறனை இந்திய- சிறிலங்கா அரசுகள் தடுத்து நிறுத்திய செய்தி உலகத்தமிழர் நெஞ்சங் களில் பேரிடியாய் விழுந்துள்ளது. ★

---

## முன்னைய தலைவர்கள்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமார் பென்னம்பலம் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்றார்.

### ஜே.ஆரின் சர்வஜன வாக்கெடுப்பு

அடுத்த கட்டமாக தீவிரவாதிகள் நாடாளு மன்றத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் எனக் கூறி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் நடாளுமன்றத்தின் ஆயுள் காலத்தை மேலும் ஆறு வருடங்களுக்கு நீடித்தார் ஜே.ஆர். சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராகப் போராட முனைந்த மதத் தலைவர்களை பொலிஸாரின் சக்தியை கொண்டு நசுக்கினார் ஜே.ஆர்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பில் யாழ்ப்பாண மக்களும் வன்னி மக்களும் ஜே.ஆர். அரசுக்கெதிரான முழு அளவிலான எதிர்ப் பைக் காட்டினர். மட்டக்களப்பு மக்களும் இவ்வரறே தமது எதிர்ப்பைக் காட்டினர். யாழ் மாவட்டத்தில் 265,534 வாக்குகள் அளிக்கப்பட்டன. இவற்றில் 25,315 வாக் குகள் மட்டுமே ஜே. ஆர்.இன் சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாக அளிக்கப்பட் டன.

### சந்திரிகா குமாரதுங்கவுக்கு கிடைத்த சந்தர்ப்பம்

1994ஆம் ஆண்டு இனப்பிரச்சினை யைத் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் போராளிக் குழுத் தலைவர்களைச் சந்தித்த படுகொலை செய்யப்பட்ட விஜேகுமாரதுங்காவின் மனைவி சந்திரிகா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். இத் தேர்தலில் விஜேகுமாரதுங்க மற்றும் போராளிக் குழுத்தலைவர்களுக்காவும் கனிசமான வாக்குகள் அளிக்கப்பட்டன. கூடுதலான தமிழ் வாக்குகளைப் பெற்று 62.5 வாக்குகளுடன் சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்றது தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நல்ல ஓர் அங்கீகாரமாகக் காணப்பட்டது. ஆனால் நடந்தது என்ன?

வழமைபோல் அவர் தனித்து விடப்பட்டார். நெருக்கடியான நேரத்தில் அவரது தாயும் அவரைக் கைவிட்டார். இது அவரால் அனுப்பப்பட்ட தெரிவுக் குழுவில் பிரதிபலித்தது. உடனடியாக எதுவித தீர்மானங்களையும் எடுக்க முடியாத ஒரு குழுவே புலிகளுடன் பேசுவதற்காக அனுப்பட்டது. அனுப்பப்பட்ட குழு வினருக்கு போதிய அறிவு, அனுபவம் என்பன இருக்கவில்லை. யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்து யாழ்.மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த லயனல் பெர்னான்டோ, தமது மொழியை மட்டுமே தெரிந்த கே.பி. ரத்நாயக்கா, மைத் திரிபால சேனநாயக்கா போன்றவர்களே பேச்சு வார்த்தைக் குழுவில் இடம்பெற்றனர். மக்களைப் பற்றி அறிந்த நடுநிலையான லஷ்மன் ஜெயக் கொடி போன்ற பல பிரச்சினைகளைக் கையாண்டவர்கள் நிராகரிக்கப்பட்டனர். லயனல் பெர்னாண்டோவை குழு விலிருந்து நீக்கியிருக்கலாம். ஏனென்றால் அவர் பேச்சுவார்த்தையின் முடிவில் எதுவும் எட்டப்படவில்லை எனக்கூறியிருந்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் தவறவிட்ட இறுதிச் சந்தர்ப்பம் இதுதான். இந்த நீண்ட காலப்பிரச்சனை எமது நாட்டுடன் நின்றுவிடவில்லை உலகம் முழுவதற்கும் வியாபித்து விட்டது. அதிகாரப் போட்டி, அர்த்தமற்ற அறிக்கைகள் போன்றவற்றை ஏற்றுக் கொள்வதற்கு இன்று நாடு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலத்தலைவர்கள் விட்ட தவறுகளையும் அவர்களது தோல்விகளையும் கருத்திலெடுத்து அவற்றை ஒரு பாடமாகக் கொண்டு தற்போதைய ஆயுதச் சூழலிருந்து நாட்டை விடுவித்து அரசியல் மயப்படுத்தப்படாத நிலைப்பாட்டை [illegible] யில் மகிந்த ராஜபக்ஷவாவது எடுப்பார் என இதய சுத்தியுடன் [illegible] ★

---


# யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2007

காலம்:-30.09.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி

இடம்:- யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மேபிள் தம்பையா கட்டடம்.

**நிகழ்ச்சிநிரல்**

1. இறைவணக்கம்
2. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை
3. அதிபர் அறிக்கை
4. செயலாளர் அறிக்கை
5. பொருளாளர் அறிக்கை
6. புதிய நிர்வாக சபைத் தெரிவு
7. பிறவிடயங்கள்
8. நன்றியுரை

பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**திருமதி க.பொன்னம்பலம்,**
*தலைவர் (அதிபர்).*

(சி/53688)

**க.கனகரத்தினம்,**
*கௌரவ செயலாளர்.*

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர்

## நல்லதம்பி விஜயரத்தினம்

(B.A.Lond.)

(ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)

தோற்றம் 26 - 06 - 1923

மறைவு 16 - 08 - 2007

*கடந்த 16.08.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கு நிகழ்வுகளில் பங்குபற்றி அனைத்து உதவிகளையும் வழங்கி எமது ஆறாத்துயரில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களிற்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (16.09.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சண்முகனின் வாசம்,
நீலிப்பந்தனை,காரைநகர்.

(64875)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## பாலசிங்கம் சுரேஸ்

தோற்றம் 17 . 09 . 1986

மறைவு 03 . 08 . 2007

**உறவுகளுக்கு அன்பானவனாய் சமூகத்துக்கு நேசமுள்ளவனாய் எல்லோருக்கும் உதவுபவனாய் வாழ்ந்த உன் வாழ்வு அர்த்தமுள்ளது.**

*உன் பிரிவால் துயருறும்:*
**துசிஜேந்திரன்** - (அண்ணன்),
**அஜிந்தினி** - (அண்ணி),
**யதுர்சன், சஹானா** (பெறாமக்கள்).

65, சிவன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(64876)

---

# VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA

The Vavuniya Campus of the University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 20th October 2007. Applications with pending results may also be considered

**FACULTY OF APPLIED SCIENCE**

**(1) Department of Biological Science**
**Demonstrator (on contract)**
Preference will be given to those who have a degree with following subjects
(I) Chemistry (II) Biology (III) Zoology

**(2) Department of Physical Science**
**(I) Demonstrator (on contract)**
Preference will be given to those who have a degree with the following subjects
(1) Computer Science (II) Information Technology
**(II) Tutor (on contract)**
Preference will be given to those who have a degree with following subjects
(I) Mathematics (II) Statistics (III) Computer Science

**Method of Application:-** The application should be made in the prescribed application forms obtainable from the Assistant Registrar/ Administration & Establishment, Vavuniya Campus OR Senior Assistant Registrar Establishment Branch, University of Jaffna by paying Rs.100/-. Those who wish to obtain application forms and further particulars by post should send a money order for Rs.100/- drawn in favour of Senior Assistant Bursar, Vavuniya Campus of the university of Jaffna payable at post office Vavuniya with a self addressed stamped envelope. Completed application forms should be sent to the **Assistant Registrar/ Administration & Establishment, Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya** under registered cover. The completed application forms should be sent to reach us on or before 20th Oct.2007.

RECTOR,
VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA,
PARK ROAD, VAVUNIYA,
12.09.2007

(C/53681)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

பண்டத்தரிப்பு, பிரான்ப ்றைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி நல்லசேகரம் தம்பதிய ரின் பேரனும் திருமதி பூமணி நடராசா அவர்களின் புதல்வருமான சதீஸ்குமார் (சதீஸ்) அவர்களுக்கும் பண்டத்தரிப்பு, பிரான்பற்றைச் சேர்ந்தர்வர்களான திரு.திரு மதி குமாரசாமி அவர்களின் சிரேஷ்ட புத்திரி செல்வி வசந்தகலா (வசந்தா) அவர்களுக்கும் நேற்று 15.09.2007 ஆம் திகதி கனடாவிலுள்ள

**RENAISSANCE BANQUET HALL** இல்

திருமணம் நடைபெற்றது.

திரு.திருமதி நல்லசேகரம்
தம்பதியரின் பேரன்
திருமதி நடராசா அவர்களின்
அருந்தவப்புதல்வன்
**சதீஸ்குமார் (சதீஸ்)**
அவர்ககள்

.திரு.திருமதி குமாரசாமி
அவர்களின்சிரேஸ்டபுத்திரி
**வசந்தகலா**
**(வசந்தா)**
அவர்ககள்

திருமணபந்தத்தில் இணைந்த இப் புதுமணத் தம்பதியினரை சகல வளங்களும் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

திரு.திருமதி இரத்தினசிங்கம்
சாமினி தம்பதிகள்,
கொடிகாமம்.

திரு.திருமதி இராஜேந்திரம்
புஸ்பராணி தம்பதிகள்.
பிரான்பற்று, பண்டத்திரிப்பு.

(64839)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பரமேஸ்வரன் - தர்சினி தம்பதிகளின்
செல்வப்புதல்வி **அபினா**
தனது முதச ்வது பிறந்த நாளை 16.09.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று சுவிஸ ்சில் (Swiss) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



அபினா

வாழ்த்துவோர்:
யாழ்ப்பாணத்தில் வசிக்கும்
அப்பம்மா, அத்தைமார்
சண்டிலிப்பாய் அத்தை, மாமா குடும்பம்,
தத்தா, ்ம்மம்மா குடும்பம் (பிரான்ஸ்),
ஜெனி, காண்டிபன் (கொலன்ட்)
சங்கர் (மலேசியா)

திருமதி பரமசாமி நாகம்மா
38, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

1( .09.2007

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

## செல்வி மகேந்திரன் தாரணி



தரணியை ஆர்வேன் என
தாரணி யாய் வந்தவளே!
நேர்த் ்க்கடன் செய்யவென
நேர்த்தியாய் பொங்கிவைத்து
நூரகர் வரவிற்காய் காத்திருக்கையில்-நீ
உணரவில்லையம்மா உனைத் தேடி
எமன் வருவான் என
தாயவள் கருவறை கலங்கி
பெற்றவள் கண்முன்னே எமனுடன்
போராடினாயே- வந்த பே,
உன் தலையில் சூடு வைத்து
ஓடி மறைந்தானே!
என்று உன்னைக் காண்போம் என
சுற்றமெல்லாம் உனை நினைத்து
வடிப்பதென்றும் இரத்தக் கண்ணீரே!

அன்னாரின் ஆத்மசாந் திப்பிரார்த்தனை இன்று (16.09.2007) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(61604)

**குடும்பத்தினர்.**

சங்கத்தானை, சாவகச்சேரி.

கண்ணாய்: 01.05.1975

கண்ணீராய்: 03.08.2007

## பற்சிகிச்சை முகாம்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடமாடும் பற்சிகிச்சைமுகாம் நடைபெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இம்முகாம் நடைபெறும்.

இதேவேளை- பண்டத்தரிப்பு பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் இயங்கி வரும் ஏழு பாடசாலைகளில் அண்மையில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையின் போது 296 மாணவர்கள் பற்சூத்தை நோயின் தாக்கத்தை உடையவர்கள் என கண்டறியப்பட்டுள்ளனர்.

இத் தகவலை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கு.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

(202-51)

## கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை

தென்மராட்சி தெற்கு, தனங்களப்புப் பகுதியில் கட்டாக்காலிகள் தொல்லை அதிகரித்துள்ளது. இதே வேளை இக் கட்டாக்காலிகளைத் தடம் இட்டு சாதுரியமாக பிடித்து இறைச்சிக்காக அழிக்கும் கும்பல்களும் அதிகரித்துள்ளன.

(202-131)

# காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளிற்கு தகுதியுள்ள விண்ணப்பத்தாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. குறிப்பிடப்படும் தகைமையுடையோர் 30.09.2007 இற்கு முன் தலைவர், காரைநகர் பனை தென்னை வள அ.கூ.சங்கம், அல்லின் வீதி, காரைநகர் என்னும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

I 1. பதவி- **பொதுமுகாமையாளர்**
2. பதவி குறியீடு:101: 9 (101:7 சு.நி. 108/81 இன்படி)
3. சம்பள அளவுத் திட்டம்: 10950- 13650 / 130X10- 140X10
(சுற்று நிருபம் 66/206 இன்படி)
4. வயதெல்லை: 21- 45 வரை
5. தேவைப்படும் தகைமைகள்:

I.கூட்டுறவு சங்க ஊழியர் 8 ஆம் (புதியது 10 ஆம்) சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 9 ஆம் (புதியது 11 ஆம்) சம்பளத் திட்டத்தில் அப்படியானதொரு பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

II. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி சான்றிதழ் அல்லது அதற்கு சமனான தகமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிலையமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

III.கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தர) சான்றிதழ்/ க.பொ.த. (உயர்தர) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம் .

6.அனுபவங்கள்: தங்களிடம் உள்ள அனுபவங்களை ஆதாரப்படுத்திக் குறிப்பிடவும்.

I. 1.பதவி: **காசாளர்**
2. குறியீட்டு இல: 306:15
(306: 13 சுற்றுநிருபம் 108/ 81 இற்கு அமைய)
3. சம்பள அளவுத் திட்டம்: 9450 - 11000 / 75X10- 80X10
(சுற்று நிருபம் 66/206 இற்கு அமைய)
4. வயதெல்லை: 21- 45 வரை
5. தேவைப்படும் தகைமைகள்:

I. கூட்டுறவுப் பணியாளர் 14 ஆம் (புதிது 16 ஆம்) சம்பளத் திட்டத்தில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

II.கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண) பத்திரம்/ க.பொ. (சாதாரண) தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ தூயகணிதம்/ தமிழ்/ சிங்கள பாஷை உட்பட 6 பாடங்களிலான சித்தியும் காசாளராக வியாபார நடவடிக்கையில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

6. அனுபவங்கள்: தங்களிடமுள்ள அனுபவங்களை ஆதாரப்படுத்திக் குறிப்பிடவும்.

*குறிப்பு:*
1. கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.
2. கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவும்.
3. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ வழங்கப்பட வேண்டும்.

தலைவர்,
காரைநகர் பனை தென்னை வ.அ.கூ.சங்கம்.

(64837)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
24
.
04
.
1928



இறப்பு
17
.
08
.
2007

## திருமதி முருகையா சின்னம்மா

உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல தாழையடி ஐயனார் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

அண்ணாவி வளவு,
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(64764)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் உண்மைக்குக் கிடைத்த முதல் வெற்றி

இலங்கையில் கட்டுப்படுத்த முடியாமல் தொடரும் வன்முறைகள் குறித்தும், மோசமாக இடம்பெறும் மனித உரிமை மீறல் பற்றியும் இப்பத்தியில் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டாகிவிட்டது.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக - குறிப்பாக அவர்களின் தாயகமான வடக்கு, கிழக்கில்- அதுவும் இலங்கை அரச படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களில் - ஆள்கடத்தல்கள், கடத்திக் காணாமற் போகச்செய்தல், சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் என்று மனித உரிமை மீறல் கொடுரங்கள் வகை தொகையின்றித் தொடர்கின்றன.

'புலிப்பயங்கரவாதத்தைப் பதில் பயங்கரவாதம் மூலம் வெல்லுதல்' என்ற விநோதமான - கொடூரமான -கோரமான - கொள்கைத் தந்திரோபாயம் ஒன்று தமிழர் தாயகத்தில் ஆரவாரமின்றி அதே சமயம் மிகத் தீவிரமாக, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் -

சட்டத்தின் மூலமும், ஜனநாயகத்தின் வாயிலாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள இறைமையுள்ள அரசு என்று ஒரு புறம் தன்னை உரிமைகோரி பிரகடனப்படுத்திக் கொண்டு, இத்தகைய கொடூரங்கள் அரங்கேற பச்சைக்கொடி காட்டி பார்த்திருக்கின்றது கொழும்பு என்பதையும் இப்பத்தியில் சுட்டிகாட்டி வந்தோம்.

ஈழத் தமிழர்கள் தங்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வதற்காக, அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, கௌரவ வாழ்வுடன் கூடிய இருப்பியலை உறுதிப்படுத்துவதற்காக - சுமார் மூன்று தசாப்தங்கள் அறவழியில், காந்தீய நெறியில், சமாதான முறையில் நடத்திய போராட்டங்கள் பௌத்த, சிங்கள பேரினவாத அரசுகளில் ஆயுதப் பலாத்கார முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டு அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கபட்டன. அமைதி வழித் தீர்வு முயற்சிகளுக்கு அழைக்கப்பட்டு, அவர்கள் ஏமாற் றப்பட்டனர். நம்பிக்கைத்துரோகம் இழைக்கப்பட்டது.

அமைதி வழியில் நியாயம் வேண்டிக் கிளர்ந்த போது அவர்கள் வஞ்சிக்கப்பட்டனர். அதை அப்போது வெறும் பார்வையாளர்களாக பார்த்துக் கொண்டு வாழவிருந்த சர்வதேச சமூகம் - இலங்கைத் தீவில் சிறு பான்மை இனம் ஜனநாயகத்தின் பெயரால் இனப்பேரழிவுக்குள் ஆழ்த்தப்பட்டிருப்பதை பார்த்திருந்த உலக சமுதாயம் - தமது விடுதலைக்கு வேறு வழி இல்லை என்ற நிலையில் ஆயுத வழிப்போராட்டத்துக்கு தமிழர்கள் தள்ளப்பட்டபோது, அதை பயங்கரவாதமாக சித்திரிப்பதில் முண்டியடித்தது.

தமிழர்கள் போரியல் போக்கில் தமது பலத்தை நிரூபித்து, இராணுவ வலுச்சமநிலையில் தம்மை உறுதிப்படுத்தி, ஸ்திரப்படுத்திக்கொண்டு, அந்தப்பின்னணியில் இலங்கை அரசுடன் சர்வதேச அனுசரணையோடு, அமைதி முயற்சிகளுக்கு முன்வந்தனர். அந்தச் சமயத்திலும் சர்வதேச சமூகம் எனத் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் மேற்குலகம் மீண்டும் ஒரு தடவை தவறிழைத்து,அந்த முயற்சிகளும் பாழாக வழி சமைத்தது.

இனப் பிணக்கின் பிரதான பாத்திரங்களான இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சமதரப்பு- சம அந்தஸ்து - என்ற நிலையில் இருந்துகொண்டே அந்த அமைதி முயற்சியில் ஈடுபட்டன.

அந்த சமாதான எத்தனவேளையில் அந்த சமதரப்பு அந்தஸ்த்தை அடியோடு குழப்பும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டுத் தடைசெய்து, அமைதி வழித் தீர்வை அசாத்தியமாக்கியது மேற்குலகம்.

அமைதி முயற்சிகளுக்கு அடிப்படையாகவும், அடித்தளமாகவும் இருந்த சமதரப்பு அந்தஸ்தைச் சீரழித்து, இலங்கைத் தீவையே மீண்டும் யுத்த விளிம்பில் கொண்டு போய் நிறுத்திய மேற்குலகம், அமைதி முயற்சிகளுக்கான யுத்த நிறுத்தத்தைப் பேணுவதாகக் கூறிக்கொண்டே தமிழர் தாயகம் மீது அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கும் கொழும்புக்கு எதிராக என்ன செய்யப் போகின்றது என்று உலகெங்கும் வாழும் தமிழர்கள் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பிக் காத்திருந்தனர்.

தமிழர் தாயகத்தின் மீது கோரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் மிகக், கொடூரமான படுகொலைக் கலாசாரம் குறித்து சர்வதேச அமைப்புகள் எல்லாம் பெரும் அபாயக் குரல் எழுப்பியதன் விளைவாக மெல்லக் கண் முழித்திருக்கிறது மேற்குலகம்.

கொழும்பு இராஜதந்திரத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி - ஆட்சேபத்தையும் பொருட்படுத்தாது- ஐரோப்பிய ஒன்றியம் நிறை வேற்றியிருக்கும் தீர்மானம், இலங்கை விவகாரத்தின் மீது நீதி தேவதையின் பார்வை விழத் தொடங்கி விட்டது என்பதையே காட்டுகின்றது.

இலங்கையில் மோசமாக அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்களை நேரடியாகத் கண்காணித்து, விசாரித்து, அறிக்கையிடுவதற்கு சுதந்திரமான - சுயாதீனமான- ஐ.நா. கண்காணிப்பாளர் குழு ஒன்றை அங்கு செயற்படுத்த வேண்டும் என ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலைக் கோருவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது பிரஸல்ஸ் கூட்டத்தில் தீர்மானித்திருக் கின்றது.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

கவுன்ஸிலின் கூட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் வரும்போது, அதை அங்கேயே வெட்டிவிடுவதற்கான தீவிர முயற்சிகளை கொழும்பு இராஜதந்திரிகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் பின்னால் அலையும் வேலையை அவர்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டனர் என்கின்றன ஜெனிவாச் செய்திகள்.

ஐரோப்பிய ஒன்றித்தின் தற்போதைய தீர்மானம், இலங்கை தீவில் இடம் பெறும் அரச பயங்கரவாதத்தை உலகளாவிய ரீதியில் அம்பலப்படுத்த வைப்பதற்கான ஆரம்பப்படி- பூர்வாங்க நடவடிக்கை - மட்டுமே இனம்தெரியாதோரின் பெயரால் அரங்கேற்றப்படும் மிகக்கோரமான - மிகக்கொடூரமான - மிலேச்சத்தனங்களையும், மனித கொலை வெறியையும் அம்பலப்படுத்துவதற்கு இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கும்.

### ஏனைய அரச ஊழியர்களும் கேட்பார்களே...

# ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு வழங்குவதற்கு 1,000 கோடி ரூபா தேவை என்கிறார் அமைச்சர்

கொழும்பு,செப்.16

ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கமைய அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக இருந்தால் அதற்கு சுமார் ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் என்று ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசதகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி ஆசிரியர்கள் இப்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 94 இல் இருந்து பல தடவைகள் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சம்பள,ஆளணி ஆணைக்குழு மற்றும் கருனாரட்ண ஆணைக்குழு ஆகியன இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றன. இப்பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைக்க அரசு முயற்சி செய்து வருகின்றது.

வெகு சீக்கிரத்தில் இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து சிபாரிசுகளைச் சமர்ப்பிக்குமாறு அரசு இந்த ஆணைக்குழுக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தவிடயம்தொடர்பாககல்விஅமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மிகவும் அவதானத்துடன் செயற்பட்டு வருகிறார். ஆசிரியர் சங்கங்களுடன் பல தடவைகள் அவர் பேச்சு நடத்தியுள்ளார். ஆசிரியர்கள் முரண்டு பிடித்ததனால் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.

*ஏனைய அரச ஊழியரும் சம்பள உயர்வு கேட்பர்*

ஆசிரியர்கள் சம்பள அதிகரிப்பு விடயத்தில் ஏனைய அரச ஊழியர்களும் கவனமாக இருக்கின்றனர். ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டால் ஏனைய அரச ஊழியர்களும் சம்பளத்தை அதிகரித்துக் கேட்பர்.

சில ஆசிரியர்கள் மாணவர்களைப் பாடசாலைகளுக்கு வர வேண்டாம் என்று கூறுகின்றனர் என்று எமக்கு தகவல் கிடைத்துள்ளது. இது பெரும் தவறு. அவர்களின் பிரச்சினையை அவர்களுடன் அரசு பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். மாறாக அவர்கள் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் வகையில் நடந்துகொள்ளக்கூடாது.

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க இப்போது அரசிற்கு சுமார் ஆயிரம் கோடி ரூபா தேவைப்படுகிறது. நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவேண்டும்.

இருப்பினும் இவர்களின் பிரச்சினையை விரைவில்முடிவுக்குள்கொண்டு வர அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது - என்றார். (சி)

## கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட சீனி பங்கீட்டுக்கு விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம், செப்.16

குடாநாட்டுக்கு 'றுகுணு' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள 465 மெற்றிக் தொன் சீனி பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் இத தகவலைத் தெரிவித்தார். கொண்டு வரப்பட்டுள்ள சீனி சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும்-

ஒரு கிலோ சீனி 60 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனிக்குரிய வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ. சங்கங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று உடனேயே களஞ்சியத்தில் சீனியைப்பெற்று பங்கீட்டு அடிப்படையிலான விற்பனையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(அ-1-23)

## தாதியர் பயிற்சி மாணவர்களுக்கு அனுமதிக் கடிதங்கள் கையளிப்பு

நல்லூர், செப்.16

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சி நெறிக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சிகளுக்குரிய அனுமதிக் கடிதங்கள் வழங்கும் வைபவம் நேற்று சனிக்கிழமை யாழ். தாதியர்பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் திருமதி தேவமலர் அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.ஞானஜோதி, குழந்தைகள் வைத்திய நிபுணர் எஸ்.கே.அருள்மொழி ஆகியோர் அனுமதிக் கடிதங்களை மாணவர்களுக்குக் கையளித்தனர்.

முன்னதாக தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் பணிமனையில் இருந்து விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

மேலதிக அரச அதிபர் சிவசுவாமி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

கல்லூரி அதிபர், பிரதமவிருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், வண.பிதா பி. பிறாயன் ஆகியோர் ஆசியுரை, வாழ்த்துரைகளை வழங்கினார்கள். தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது.(203-111)

## மேர்வினின் மகனுக்கு பிணை வழங்க மறுப்பு

கொழும்பு, செப்.16

கொழும்பு கேளிக்கை விடுதியொன்றில் வைத்து கணக்காளர் ஒருவரை பிஸ்டலால் தாக்கிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலகசில்வாவுக்கு பிணை வழங்க மறுத்துவிட்டது கல்கிஸை நீதிவான் நீதிமன்றம்.

மாலக சில்வா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை நிராகரித்த கல்கிஸை மேலதிக நீதிவான் தர்ஷிகா விமலஸ்ரீ, சந்தேக நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படியும் உத்தரவிட்டார்.

கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த வேளை அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டு அங்கேயே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபரை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றும் படியும் நீதிவான் உத்தரவிட்டார். (சி)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி - 31 | திங்கட்கிழமை 17.09.2007 |
| திதி : | சஷ்டி பி.இ. 04.50 |
| நட்சத்திரம் : | விசாகம் மு.ப. 11.08 |
| சுபநேரம் : | [illegible] |
| ராகுகாலம் : | [illegible] |

## விமானத் தாக்குதலில் பாதிப்புற்ற மன்னார்ச் சிறுமிக்கு நிதியுதவி

கொழும்பு, செப். 16

மன்னார் படகுத்துறைக் கிராமத்தின் மீது இலங்கை வான்படையின் போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் தனது இடது காலைத் தொடையுடன் இழந்த 12 வயதுச் சிறுமிக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் நம்பிக்கை நிதியத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் இலுப்பைக் கடவை படகுத்துறைக் கிராமத்தின் மீது கடந்த ஜனவரி மாதம் 2ஆம் திகதி காலை இலங்கை வான்படையின் கிபீர் விமானங்கள் நடத்திய கோரத்தாக்குதலில் படகுத்துறைக் கிராமத்தில் வசித்து வந்த அ.யுனிஸ்ரெலா என்ற 12 வயதுச் சிறுமி தனது இடது காலை தொடையுடன் இழந்திருந்தார்.

அச்சிறுமியின் எதிர்கால கல்விப் பயன்பாட்டிற்காக தமிழீழ தேசியத் தலைவரால் வழங்கப்பட்ட நிதியை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அச்சிறுமியின் இல்லத்துக்கு சென்று கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கையளித்தார். தமிழீழ வைப்பகத்தின் நாச்சிக்குடா கிளையில் பணம் வைப்பிலிடப்பட்டு அதற்குரிய வங்கிப்புத்தகம் சிறுமியிடம் கையளிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் சிறுமியின் தாய் மற்றும் சகோதரர்கள் இருவரும் காயமடைந்திருக்கின்றனர். காலை இழந்த சிறுமி தற்போது நாச்சிக்குடா குமுழமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 7 ஆம் தரத்தில் கல்வி பயின்று வருகின்றார்.

(சி)

## மனித உரிமைகள் பாதுகாப்பு குறித்து அரசின் நடவடிக்கை அடங்கிய பட்டியல்

### ஐரோப்பிய ஒன்றியத் தலைவரிடம் கையளிப்பு

கொழும்பு, செப். 16

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அகதிகளை மீளக்குடியமர்த்துவதற்கும் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இலங்கைக்கான பிரிட்டன் தூதுவரும் தற்போதுஇலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத் தலைமைத்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவருமான டொமினிக் சில்கொட்டிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளித்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கை, கிழக்கைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பின் அரசு அங்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கை, கிழக்கு மக்களின் நிலை, அவர்களை மீள்குடியமர்த்த அரசு மேற்கொண்டுவரும் முயற்சி ,17 தொண்டு நிறுவன ஊழியர்கள் கொலை தொடர்பாக இடம்பெற்றுவரும் விசாரணைகளுக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் அதில் குறிப்பிட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர விடைத்தாள் மதிப்பிடும் பணி; ஆசிரியர் சங்கங்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டன

கொழும்பு, செப்.16

கடந்த மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணியைப் புறக்கணித்து வந்த ஐந்து ஆசிரியர் தொழில் சங்கங்களும் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தை கைவிட்டன. அதனை அடுத்து விடைத்தாள் மதிப்பிடும் பணி நேற்று ஆரம்பமாகியது.

சம்பள உயர்வு கோரி இந்தப் போராட்டத்தை ஐந்து தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வந்தன. கல்வியமைச்சு மற்றும் சம்பள நிர்ணய சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை தொழிற்சங்க பிரதிநிதிகள் நடத்தினர். எனினும் அந்தப் பேச்சுகளில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

இதற்கிடையில் - ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சைக்கு தோற்றிய அனுராதபுரத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த உயர் நீதிமன்றம், விடைத்தாள் திருத்தும் பணி இடையூறின்றி தொடரவேண்டும் என்று கடந்த 6ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த 13ஆம் திகதி விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பமாகும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்திருந்தார். எனினும், அன்றைய தினம் தொழிற்சங்கங்கள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டன.

இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்த ஐந்து தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் கூடிய ஐந்து தொழிற்சங்கங்களும் பணிப்புறக்கணிப்பை கைவிட முடிவு செய்தன என்று அறியவந்தது.

பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதை தொடர்ந்து ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணி நேற்று ஆரம்பமானது. (அ-1)

## வெள்ளியன்று வவுனியாவில் மோதல்; ஆறு புலிகள் பலியென அறிவிப்பு

கொழும்பு, செப்.16

வவுனியா, கட்டைப் பெருமாள்குளம் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகளுக்குள் வெள்ளிக்கிழமையன்று ஊடுருவமுயன்ற விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் இதனைத் தெரிவித்தது.

இத்தாக்குதலில் ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்றும் படையினர் மூவர் பலியானதாகவும் ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

அதேவேளை-

வவுனியா கள்ளிக்குளம் முன்னரங்கப் பகுதிக்குள் ஊடுருவ முயன்ற விடுதலைப் புலிகள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் எட்டுப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்றும் ஊடக நிலையம் மேலும் தெரிவித்தது.

இந்த மோதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து தகவல் ஏதும் வெளியாகவில்லை. (அ-1)

### பழ. நெடுமாறன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்தினேன்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் மூலம் எனக்கு தெரியப்படுத்தியுள்ளார். அதன் அடிப்படையிலும் வைகோ, பாரதிராஜா மற்றும் பல அன்பர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் போராட்டத்தை நிறுத்தியுள்ளேன்.

உலகளாவிய விவகாரமாகிவிட்ட உணவு அனுப்பும் நடவடிக்கையை கருணாநிதி நிறைவேற்றுவார் என நம்புகிறேன் - என்றார்.

உண்ணா விரதத்தை முடித்து வைக்கும் நிகழ்வில் உடனிருந்த ராமதாஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

தமிழக மக்களின் உதவிப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப கலைஞர் கருணாநிதி உதவுவதாகக் கூறியுள்ளார்.

அந்த உத்தரவாதத்திற்கு மேலாக, பழ நெடுமாறனின் உடல்நிலை மோசமடைந்திருக்கிறது. அவரைப்பரிசோதித்த போது அது தெரிய வந்துள்ளது. அவரை இழக்க நாங்கள் தயாராகவில்லை. ஆகவே உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்டேன் - என்றார். (அ-1-5)

### இராமேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் கைதானதைக் கண்டித்தும், அவர்களை விடுவிக்க மத்திய அரசும், தமிழக அரசும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியும் தமிழக மீனவர்கள் நேற்று தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். (அ-1-5)

### உயிலங்குளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வியாழக்கிழமை மன்னார் ஆயர் இராயப்பு யோசப், வத்திக்கான் பிரதிநிதி அதிமேற்றிராணியார் மல்கம் ரஞ்சித்துடன் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

உயிலங்குளம் பாதை மூடப்பட்டுள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து அப்போது அரசியல் பொறுப்பாளருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இடம்பெயர்ந்து இன்னல்களுக்கு ஆளாகியுள்ள 7 ஆயிரம் மக்களை மடுவில் குடியமர்த்த வசதியாகவும், மடுப்பகுதி மக்களுக்கான பொருள்களை அனுப்ப வசதியாகவும் உயிலங்குளம் பாதையைத் திறக்கவேண்டும் என்று சு.ப. தமிழ்ச்செல்வனிடம் கோரிக்கை விடப்பட்டது.

உயிலங்குளம் பாதையைத் திறப்பதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை தமது தரப்பு வழங்கியுள்ளதாகவும் அது விரைவில் திறக்கப்படும் என நம்புவதாகவும் அரசியல் பொறுப்பாளர் தெரிவித்திருந்தார் என மன்னார் ஆயர் கூறினார்.

இதேவேளை - பாதை திறப்பதற்கான பாதுகாப்பு உத்தரவாதம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு தெரியவில்லை. (அ-1)

## ஸ்ரீபதிக்கு எதிராக நடவடிக்கை சு.க. எடுப்பதற்கு தடை உத்தரவு

கொழும்பு, செப். 16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கட்சி மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்திருக்கின்றது.

ஸ்ரீபதி சூரியாராய்ச்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றைப் பரிசீலனைக்கு ஏற்ற பின்னரே கொழும்பு மாவட்ட நீதிபதி சிசிர ரத்னாயக்க இந்த உத்தரவை விடுத்தார்.

இந்த மனுவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன உட்படப் பலர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஸ்ரீபதி சூரியாராய்ச்சிக்கு எதிராக ஏன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு கோரி அவருக்கு கட்சியினால் இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

அந்தக் கடிதங்கள் தொடர்பாகவே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் இத்தடை உத்தரவு விடுத்தது. (சி)

### ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுல்செய்யப்படும் என்று பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல்வரை இரவு 9 மணி முதல் அதிகாலை 4.30 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கபட்டிருந்தது. எனினும் நேற்று அதில் மாற்றம் செய்யப்பட்டு மாலை 7 மணி முதல் அதிகாலை 4.30 மணிவரை நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

### மந்திகையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரே பலியாகினர்.

பலியான படையினரின் சடலங்கள் நேற்று காலை மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. காயமடைந்த படையினரும் ஆதார வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டு பின்னர், இராணுவ வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து நேற்று காலை 8 மணிவரை அப்பகுதியால் வகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

கிளைமோரில் சிக்கி பெரும் சேதமடைந்த பஸ் நேற்று மாலைவரை சம்பவ இடத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவத்தை அடுத்து வடமராட்சியில் மந்திகை, சாரையடி, கூவில், மடத்தடி ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை 6 மணி முதல் இரண்டு மணிவரை இத்தேடுதல் இடம்பெற்றது. வீடு வீடாக சென்ற படையினர் சகலரையும் குரும்பகட்டி வைரவர் ஆலயத்துக்கு செல்லுமாறு பணித்தனர். அங்கு வைத்து சகலரும் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டனர். (அ-1- 202-115-155-15)

### கிளாலியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை ஆரம்பித்தனர் என்றும் -

அவர்களை வழிமறித்து, ஒன்றரை மணி நேரம் தாக்குதல் நடத்தியதாகவும், படையினர் பெரும் இழப்புடன் தமது நிலைகளுக்குத் திரும்பினர் என்றும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து அரச தரப்பில் நேற்றிரவு இச் செய்தி எழுதப்படும்வரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (அ-1)

### வதிரி முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் இடம்பெற்றபோது அப்பகுதி ஊடாகச் சென்ற ராஜரத்தினம் சேரன் (வயது 25) என்பவர் காயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-1-155)

### தியாகி திலீபனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றி, மலரஞ்சலி செலுத்தி அஞ்சலி செலுத்தினார். வன்னியில் நேற்றுக் காலை 9.55 மணியளவில் பல்வேறு இடங்களில் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. திலீபனின் திருவுருவப் படம் வைத்து மலரஞ்சலிகள் இடம்பெற்றன.

தியாகி திலீபனின் நினைவு நாள் எதிர்வரும் 26ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. (அ-1)

### விடுதலைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மருந்து இன்றி அல்லற்படுகிறார்கள். அவர்களின் துன்பங்களை நீங்க சம்பந்தப்பட்டவர்கள் உதவிகளை வழங்கவேண்டும்.

இலங்கையில் நிலவும் துயரம் மிக்க நிகழ்வுகளையிட்டு கவலையடைகின்றோம். இவற்றுக்கு மூல காரணமான இனப் பிரச்சினையை போரின் மூலம் தீர்க்கமுடியாது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குச் சகல தரப்பினரும் முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் மீளவும் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு முயற்சிக்க வேண்டும்; ஆழமாக மேற்கொள்ளவேண்டும். பேச்சுக்களைத் தொடங்குவதற்கான முயற்சிகளை எவ்வளவு விரைவாக ஆரம்பிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக ஆரம்பிப்பதன் மூலமே இன்றைய மோசமான நிலைக்குத் தீர்வைக் காணமுடியும்.

இன மோதலுக்கு போரின் மூலம் தீர்வைக் காணமுயற்சிப்பதை விடுத்து, மனிதாபிமான முறையில் தீர்வுகாண முயலவேண்டும்.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, மதத்தலைவர்களின பங்களிப்பு மிக அவசியம். மதத்தலைவர் என்ற வகையில் மனிதாபிமான ரீதியில் இந்தப் பிரச்சினையை நோக்கவேண்டும் என்று கோருகின்றேன்.

*மத ரீதியான கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு சாத்தியம்*

மத ரீதியான கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வைக் காணமுடியுமா என்பதனைச் சிந்திக்கவேண்டும்.

போரினால் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்கள் என்பதை சகல தரப்பினரும் உணரவேண்டும். போரினால் பாதிக்கப்படும் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க அதிகாரத்தில் உள்ளவர்கள் முன்வரவேண்டும். அதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

இலங்கையில் அரச தரப்பு எதிர்த்தரப்பு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோரை சந்தித்தபோது இதனை வலியுறுத்தினோம். இலங்கையின் இப்போதைய துரதிஷ்ட நிலைக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திச் சுட்டிக்காட்டினேன் - என்றார். (அ-1)


CB Computer Academy
Station Road, Kondavil. ☎:-021-4590291
அனைத்துக் கணனிக் கற்கை
நெறிகளும் ஆரம்பம்!

துரித தபால்கள், பொதிகள் சேவை
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருள்கள் உணவுப் பொருள்கள் உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணி நேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL MONEY TRANSFER
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, தொ.பே. 021 222 7310

G.A.Q. FIRST IN COMMERCE 2008/2009
யாழ்., பேராதனை விரிவுரைகள் 23.09.2007 இல் ஆரம்பமாகின்றன. பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.
B.Com. Part I, II, III
B.A. Part I, II
விரிவுரைகள் அரம்பமாகி நடைபெறுகின்றன.
விபரங்களுக்கு:-
இயக்குநர், பட்டப்படிப்புகள் கல்லூரி
57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக) கடந்த 30 வருடங்களாக வெளிவாரிப்பட்டப் படிப்புகளுக்கு என தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ். நகரில் இதுவே.

அத்தி பூத்தாற் போல்
Refurbised PU System
Samsung Branded, Imported from Korea
Intel original MotherBoard, Intel Pentium4 1.5/1.7/1.8/2.0 Processor, 256 MB Ram, 40Gb HDD, Cdrom, Kb, Mouse & Speaker
Monitors 15"/17"/17" True Flat CRT
BRAND NEW ASSEMBLED
Intel Pentium4 3.0/2m
Intel Original 945 MB
512 Mb DDR2, 160Gb HDD-Sata, Combo, 15" Color CRT, Keyboard, Speaker, Mouse & UPS
Just 63900/-
NOW Available
Canon & HP Printers
Canon Lide 25 Scanner
AGP & PCI Express VGA
All type of Mother Boards
SDR, DDR1 & DDR2 Mem
All type of Processors
வடமராட்சி மற்றும் தென்மராட்சியில் எமது சர்வீஸ் முகவர்கள் உள்ளனர்
UNIT
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org